பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 23 சனிக்கிழமை 08.07.2023 கதிர் 239

# சீனி ஆலையை வரவேற்பது அறிவுடையோர் செயலல்ல

**உண்மையான தமிழ்த் தேசியப் பற்றாளர்கள் அதைச் செய்யமாட்டார் என பொ.ஐங்கரநேசன் கடும் சாடல்**

போரால்பாதிக்கப்பட்டதமிழ் மக்களின் வாழ்வாதாரத்தை, பொருளாதார நிலையை மேம்படுத்துவதற்குஅபிவிருத்தி அவசியம். ஆனால், இந்தமண்ணை அல்லது வடக்கு மண்ணினுடைய வளத்தையும் மக்களையும் பாதிக்காத ஏராளமான அபிவிருத்தித் திட்டங்கள் இருக்கத்தக்கதாக மோசமானபின்விளைவுகளைஏற்படுத்தக்கூடிய சீனித் தொழிற்சாலையைவரவேற்பதுஎன்பது அறிவுடையோரின் செயலாக ஒருபோதும்இருக்காது. உண்மையான தமிழ்த் தேசியப் பற்றாளர்களும்ஒருபொழுதும் இந்தச்சீனித்தொழிற்சாலையை வரவேற்க மாட்டார்கள்.

இவ்வாறு கடுமையாகச் சாடினார் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத் தலைவர் பொ.ஐங்கரநேசன். வவுனியா மாவட்டம்,நைனாமடுவில்சீனித் தொழிற்சாலை அமைக்கவும் அதற்காக பெருமளவு நிலத்தில் கரும்புச் செய்கை மேற்கொள்ளவும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருப்பது குறித்து யாழ்ப்பாணத்தில் நேற்றுச் செய்தியாளர்களிடம் பேசும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுதொடர்பில்அவர்மேலும் தெரிவித்ததாவது:

வவுனியா மாவட்டத்தின் வடக்கு பிரதேச சபைக்கு உட்பட்ட பிரதேசத்தில் பெரும் சீனித் தொழிற்சாலை ஒன்றை அமைப்பதற்கும்அதற்குத் ☞2

# இது ரகசியம் அல்ல!

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்காகப் பெறப்பட்டவேட்புமனுக்களைஇல்லாமலாக்கி சபைகளின் ஆயுள் காலத்தை மேலும் ஒரு வருடத்திற்கு நீடிப்பதற்கான சட்டத் திருத்தத்தை மேற்கொள்வதற்கான வரைவு இந்த வாரம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது.

தனிநபர் முன்மொழிவாகக் கொண்டு வரப்பட்ட இந்தச் சட்ட வரைவு, வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின்னர் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது.

இதேபோன்றதொரு தனிநபர் வரைவு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனால் மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் முன்வைக்கப்பட்டு, இரண்டாவது தடவையாகவும் அது வர்த்தமானியில் இந்த ஆட்சியினால் வெளியிடப்பட்டது. ஆனால், அதனை நாடாளுமன்றத்தில் முன்வைக்க எந்தவித நடவடிக்கையும் இதுவரையில் எடுக்கப்படவில்லை.

அப்படியிருந்தும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலுக்கான வேட்புமனுக்களை இல்லாது செய்வதற்கான சட்டவரைவு நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுவிட்டது. இன்னும் இரண்டு வார காலத்திற்குள் இந்தச் சட்ட வரைவை ☞2

# இலங்கை சிங்கள. பௌத்த நாடு: தமிழ் நீதிபதி விளங்கவேண்டும்

**நாடாளுமன்றத்தில் நேற்று விசம் கக்கினார் சரத் வீரசேகர**
**தொல்பொருள்களைக் காக்க சிங்களவரை ஒன்றிணையவும் அழைப்பு**

இலங்கை சிங்கள பௌத்த நாடு என்பதைத்தமிழ்நீதிபதிவிளங்கிக்கொள்ளவேண்டும். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள பௌத்த தொல்பொருள் மரபுரிமைகளுக்கு எதிராகச் சில நீதிபதிகளும் செயற்படுகிறார்கள். குருந்தூர் மலையில் இருந்து எம்மை வெளியேற்றிய முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதியின் செயற்பாட்டை ஏற்றுக் கொள்ள முடியாது. தொல்பொருள் தொடர்பில் ஆராயும் அதிகாரம் அவருக்கு இல்லை.

இவ்வாறுநேற்றுநாடாளுமன்றத்தில் ☞2

# வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் நியமனம்

(ந.லோகதயாளன்)

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளராக தற்போதைய வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் மூத்த உதவிச் செயலாளர் ம.பற்றிக்ரஞ்சன் நியமிக்கப்பட்டுள்ளார்.

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் உமாமகேஸ்வரன் இன்று முதல் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபராக பதவியேற்றுச் செல்வதனால் ஏற்படும் வெற்றிடத்திற்கே பற்றிக்ரஞ்சன் மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சாள்ஸ்சினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனத்திற்கமைய எதிர்வரும் ஜூலை 10 முதல் நடைமுறைக்கு வரும் வகையிலேயே இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளராக எதிர்வரும் திங்கள் கிழமை கடமையை பொறுப்பேற்கவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# இரத்மலானை – யாழ். சேவைக்கு 2 விமான நிறுவனங்கள் தயார்

**அமைச்சர் நாடாளுமன்றில் அறிவிப்பு**

இரத்மலானை விமான நிலையத்திலிருந்து யாழ்ப்பாணம் வரை விமான சேவைகளைத் தொடங்க பீச் எயார் மற்றும்சினமன்எயார் ஆகிய இரு விமான சேவை நிறுவனங்கள் இணக்கம் தெரிவித்துள்ளன என்று விமானசேவைகள்அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

மட்டக்களப்பு, திருகோணமலை, மத்தள, கட்டுநாயக்க உள்ளிட்ட விமான நிலையங்களிலிருந்து உள்நாட்டு விமான சேவைகளைத் தொடங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என துறைமுகங்கள் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில்இடம் பெற்றவானூர்திமூலம்ஏற்றிச் செல்லல் (திருத்தச்) சட்ட மூலம் தொடர்பான விவாதத்தைத் தொடக்கி வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு ☞2

# ஒலுவில் வடக்கு கடல் அரிப்பு குறித்து அமைச்சரின் கவனம் கோரிய ஹக்கீம்

ஒலுவில் வடக்கில் இடம்பெறும் மிக மோசமான கடலரிப்புத் தொடர்பில் மீன்பிடித்துறை அமைச்சர் டக்ளஸ்தேவானந்தாகவனம் செலுத்தவேண்டும் என்று நேற்று நாடாளுமன்றத்தில் வலியுறுத்தினார் முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூவ் ஹக்கீம்.

ஒலுவில் துறைமுக அலைத்தடுப்பு அணை காரணமாக ஒலுவிலுக்கு வடக்கே இருக்கின்ற பல பிரதேசங்கள் மிகவும் மோசமானகடல்அரிப்புக்குஉள்ளாகி இருக்கின்றன. இதற்கு எல்.எச்.ஐ. நிறுவனமும்பொறுப்பு என்பதைக் கவனத்தில் கொள்ளுங்கள் - என்றார் அவர். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஒலுவில்துறைமுகத்தின் அலைத்தடுப்பு அணை சம்பந்தமான பிரச்சினையில் தொழிநுட்ப ரீதியில் பெரும் கோளாறு உருவாகி, இன்று ஒலுவிலுக்கு வடக்கே இருக்கின்ற நிந்தவூர், காரைதீவு, மளிகைக்காடு வரையான பிரதேசங்கள் மிகவும் மோசமான கடல் அரிப்புக்கு உள்ளாகிஇருக்கின்றன. இதுசம்பந்தமாக எல்.எச்.ஐ. நிறுவனம் பொறுப்பு கூறவேண்டும்.

இந்த நாட்டிலே இருக்கின்ற ஒரே நிறுவனம் என்ற காரணத்தினால் அந்த நிறுவத்தின் ஊடாக ஏற்பட்ட இந்த பிரச்சினைகளுக்கு அது எந்த நஷ்ட ஈடும் கொடுப்பதாக இல்லை.

எனவே ஒலுவிலுக்கு வடக்கே இடம்பெறுகின்ற இந்த பெரும் கடல் அரிப்புக்கு எல்.எச்.ஐ. நிறுவனமும்பொறுப்பு கூறவேண்டும் என்பதை விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் என்றவகையில் நீங்களும் கருத்திற்கொள்ள வேண்டும் -என்றார்.

இதற்கு மீன்பிடி நீரியல்வள அமைச்சர் டக்ளஸ் தேவானந்த பதிலளித்தார். ☞2

# இந்தியக் கப்பல் ஒன்று நேற்று பேசாலையில் தரைதட்டியது

**சீரற்ற காலநிலையால் அலையில் அடித்துவரப்பட்டது**



ந.லோகதயாளன்.

இந்தியாவிற்குச்சொந்தமான மிகப் பெரும் கப்பல் ஒன்று மன்னார் பேசாலைப் பகுதியில்தரை தட்டியுள்ளது.

இந்திய கரையோரத்தில் நிலவும்சீரற்றகாலநிலை காரணமாக அலையில் அடித்து வரப்பட்ட நிலையிலேயே பேசாலையில் தரை தட்டியுள்ளது.

தரையில் இருந்து சுமார் 250மீற்றர்தூரத்தில்கப்பலும் மற்றொரு பாஜ் எனப்படும் பாதையும் தரை தட்டியுள்ளன. கரைக்கு நெருக்கமாக பாஜ் தரைதட்டியுள்ளது. இதில் பணியாற்றிய 11 பணியாளர்களும் ☞2

# கடற்படைக்குக் காணி சுவீகரிக்க மண்டைதீவில் ஈபிடிபியும் எதிர்ப்பு

மண்டைதீவில்கடற்படையினரின்தேவைக்குதனியார் காணிகளை சுவீகரிப்பதற்கு ஆட்சிப் பங்காளியான ஈபிடிபி கட்சியும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

மக்களின் நிலம் மக்களுக்கே சொந்தமானது. இதுவே எமது கட்சியின் நிலைப்பாடு. இதை எவரும் தட்டிப்பறிக்க முடியாது. மண்டைதீவுகிழக்கில்உள்ள, தனியாருக்கு சொந்தமான 18 ஏக்கருக்கும் அதிகமான காணிகளும் அவர்களுக்கே உரியது என்றார் கட்சியின் யாழ். மாவட்ட உதவி நிர்வாகச் செயலாளரும் ஊடகப் பேச்சாளருமான ஐயாத்துரை ஷ்ரீ ரங்கேஸ்வரன் .

யாழ்ப்பாணத்தில்நேற்று செய்தியாளர்களைச்சந்தித்துப் பேசியபோது அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது: .

யாழ்ப்பாண மாவட்டம் வேலணைப் பிரதேச செயலாளர் பிரிவின், மண்டைதீவு கிழக்கு J/07 கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள, 36 பேருக்குச் சொந்தமான 18 ஏக்கருக்கும் அதிகமான தனியார் காணிகளை, கடற்படை முகாம் அமைப்பதற்காக சுவீகரிக் கும் நோக்கில், ஜூலை 12 அளவீடு செய்யப்போவதாக நில அளவைத்திணைக்களத்தினரால் உத்தியோகபூர்வமாகஅறிவிக்கப்பட்டுள்ளது.

தமது காணிகளை கடற்படையானது ☞2

# வடக்கு சுற்றலாத்துறைக்கு தலைவராகப் பத்திநாதன்

**நியமனம் வழங்கினார் ஆளுநர்**

(ந.லோகதயாளன்).

வடக்கு சுற்றுலாத்துறையின் புதிய தவிசாளராக மாகாணத்தின் தலைமைச் செயலராக முன்னர் பதவி வகித்தவரான அ.பத்திநாதன் வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பிO.எஸ்.எம். சாள்சினால்நியமனம்செய்யப்பட்டுள்ளார்.

நேற்று அவருக்கான நியமனக் கடிதம் வழங்கப்பட்டது. ஜூலை10முதல்2024 ஜூன்30வரையானஓராண்டு காலத்துக்குச் செயல்படும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு சுற்றுலாத்துறையின் ஏனைய புதிய உறுப்பினர்கள் அடுத்த வாரம் நியமிக்கப்படுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# கொக்குத்தொடுவாயில் நீதியை உறுதிப்படுத்தவேண்டும் அரசு

**வலியுறுத்தி நேற்று முல்லையில் பேராட்டம்**



முல்லைத்தீவு மாவட்டம், கொக்குத்தொடுவாயில் அழகத் தொடங்கியுள்ள மனிதப் புதைகுழி விடயத்தில் உண்மை, நீதி, பொறுப்புக்கூறலை இலங்கை ஆட்சியாளர்கள்உறுதிப்படுத்த வேண்டும்என்றுவலியுறுத்தி நேற்று முல்லைத்தீவு நகரில் போராட்டம் இடம்பெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு முன்பாக காலையில் இடம்பெற்ற இந்தக் கவனயீர்ப்புப் ☞2

# ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் எதுவும் நடக்கலாம்

**நிமல் பரபரப்புத் தகவல்**

'ஜனாதிபதித்தேர்தலுக்கு முன் எதுவும் நடக்கலாம். எனவே, தேர்தல் அறிவிப்பு வந்த பின்னர்தான் எந்த வேட்பாளரை நான் ஆதரிப்பேன் என்பதைப் பகிரங்கமாகக் கூறுவேன்.'

இவ்வாறு அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

'அடுத்தஜனாதிபதிவேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கதான் என்று ஐக்கிய தேசியக் கட்சி முக்கியஸ்தர்கள் கூறுகின்றார்கள். அப்படி அவர் களமிறங்கினால் நீங்கள் அவரை ஆதரிப்பீர்களா?' - என்று எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

'இன்னும் ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்படவில்லை. வேட்புமனு கோரப்படவில்லை. தேர்தலுக்குக்காலம் உண்டு. அதனால் இப்போதே அது பற்றி தீர்மானிக்க முடியாது.

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டால் அந்த நேரத்தில்தான் ☞2

# புதிய பொலிஸ் மா அதிபர் 48 மணி நேரத்தில் நியமனம்

**நாடாளுமன்றில் நேற்று பிரதமர் உறுதி**

எதிர்வரும் 48 மணித்தியாலங்களுக்குள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பொலிஸ்மாஅதிபர்ஒருவரைப் பெயரிடுவார் என்று பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுஉரையாற்றும்போதே அவர்இதனைத்தெரிவித்தார்..

எப்போது புதிய பொலிஸ்மா அதிபர் நியமிக்கப்படுவார் என்று சபையில் உரையாற்றும்போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும ஆகியோர் கேள்விகளை எழுப்பியிருந்தனர். இதற்குப் பதிலளிக்கும்போதே பிரதமர் மேற்கண்டவாறு கூறினார்.

அரசியல்சாசனசபையை எந்த நேரத்திலும் சபாநாயகரால் கூட்ட முடியும் எனவும், ஜனாதிபதியின் பரிந்துரைக்கு அனுமதி பெற்றுக்கொள்ள முடியும் எனவும் பிரதமர் மேலும் தெரிவித்தார். .

புதியபொலிஸ்மாஅதிபர் நியமிக்கப்படாமை ☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

எதிர்த்து நீதிமன்றத்தில் யாரும் வழக்குத் தாக்கல் செய்யவில்லை என்றால், நாடாளுமன்றத்தில் அது விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு நிறைவேற்றப்படும். ஆனால், எதிர்க் கட்சியானஐக்கியமக்கள்சக்தி இந்தச்சட்டவரைபுஜனநாயக விரோதம் என்று தெரிவித்து அதற்கெதிராகநீதிமன்றத்தை நாடப்போவதாக அறிவித்துள்ளது.

அப்படிநீதிமன்றத்தில்வழக்குத் தாக்கல் செய்யப்பட்டால் அதன்தீர்ப்புவரும்வரைக்கும் நாடாளுமன்றத்தில் இந்தச் சட்டவரைபு நிறைவேற்றப்படாது. இந்த நிலையில் நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர்சஜித்பிரேமதாசஒரு சுவாரஸியமானகேள்வியை உள்ளூராட்சிசபைத்தேர்தல் தொடர்பில் எழுப்பினார்.

உள்ளூராட்சிசபைத்தேர்தலை நடத்த 10 பில்லியன் ரூபாய் ஆட்சியாளர்களிடம் இல்லை என்று தெரிவித்துத்தான் ஆட்சியாளர்கள் தேர்தலை நடத்தாமல் தடை செய்து வைத்திருக்கிறார்கள். ஆனால், இலங்கை மக்கள் வங்கியின் துணை நிறுவனமான பீப்பிள் லீஸிங் நிறுவனம் மூலம் ஜனசக்தி நிறுவனத்தின் பெஃஸ்ட் கப்பிட்டல் ஹோல்டிங் நிறுவனத்தின் 33 வீத பங்குகளை 5 பில்லியன் ரூபாய் செலவிட்டு வாங்குவதற்குத் தயாராகி இருக்கின்றது. கொழும்பு பங்குச்சந்தைநிர்வாகம்இந்தப் பரிவரத்தனை தொடர்பாக அறிவித்திருக்கின்றது. தேர்தலை நடத்தப் பணம் இல்லைஎன்றுகூறும்ஆட்சியாளர்கள்,அரசநிறுவனங்களைத் தனியார்மயமாக்கப் போகிறார்கள் என்று அறிவிக்கும் ஆட்சியாளர்கள் இப்போது தனியார் நிறுவனம் ஒன்றில் தேர்தலுக்கான பணத்தில் அரைவாசியை எப்படி முதலிடப்போகிறார்கள்என்று கேள்வி எழுப்பியிருக்கிறார் சஜித் பிரேமதாஸ.

இதற்காகவெல்லாம்ரணில் விக்கிரமசிங்க அசரப்போவதில்லை. நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தால் தவிர உள்ளூராட்சி தேர்தல்கள் சட்டத் திருத்தத்தை நிறைவேற்றுவதில் ஆட்சியாளர்கள் கருத்தாக இருப்பார்கள். விரைவில் அந்த வழக்கைத் தாக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையேல் அரசின் அடுத்த ஜனநாயக விரோதச் செயலைத் தடுத்து நிறுத்த முடியாமல் போகும்.

**இடிமின்னல்**
(idiminnal23@gmail.com)

## இந்தியக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை கடற் படையினரால் மீட்கப்பட்டு கரை சேர்க்கப்பட்டனர்.

இந்தக் கப்பலில் இருந்து மீட்கப்பட்ட 11 பணியாளர்களில் 6 பேர் இந்தியர்கள் எனவும் ஐவர் இந்தோனேசியர்கள் எனவும். கடற்படையினர் தெரிவிக்கின்றனர்.

இதேநேரம் இந்தியாவிற்குச் சொந்தமான இக் கப்பல் மாலைதீவில் இருந்து இந்தியாவிற்கு திரும்பிக்கொண்டிருந்தசமயமேஇவ்வாறு சீரற்ற காலநிலையால் அலையில் அடித்து வரப்பட்டு மன்னார் கரைக்கு இழுத்து வரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## சீனி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேவையான கரும்பை உற்பத்தி செய்வதற்கும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. சீனித் தொழிற்சாலையை அமைப்பதற்கும் அந்த ஆலைக்கு பெருமளவில் பெருந்தோட்டப் பயிர்களாகக் கரும்பை வழங்குவதற்கும் ஏறத்தாள 74 ஆயிரத்து 100 ஏக்கர் காணியை வழங்குவதற்கும் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இந்தத் திட்டத்தை முன்னெடுக்கின்ற தரப்பினர், அமைய இருக்கின்ற இந்த பெரும்சீனித்தொழிற்சாலை போரினால் பாதிக்கப்பட்ட வன்னி மக்களுக்கு, பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு வாராது வந்த வரப்பிரசாதம் என்று சொல்லிச் சிலாகித்துக் கொண்டிருக்கிறார்கள்.

உண்மையில் இந்த சீனித் தொழிற்சாலையின் பின்னால்இருக்கக்கூடியவை இனிப்பானசெய்திகள் அல்ல. இந்த உண்மைகள் மிகவும் கசப்பானவை. வடக்கில் வவுனியா மாவட்டத்தில் மட்டுமல்ல, எந்தஇடத்தில்தன்னும் சீனித் தொழிற்சாலை அமைவது என்பது ஒரு விசத்தை விதைப்பதற்கு ஒப்பானது.

எந்த வகையான அபிவிருத்தித் திட்டங்களாக இருந்தாலும் அந்தத் திட்டம் அந்தப் பிரதேசத்திற்குப் பொருத்தப்பாடானதுதானா என்பதை அறிந்துகொள்வதற்கு, அந்தத்திட்டத்திற்குத் தேவையான நீர்த் தேவை அளவே முதலில் கணக்கில் எடுக்கப்படுகின்றது; கருத்திலெடுக்கப்படுகின்றது. இதனை நீரின் அடிச்சுவடு என்று சொல்கிறார்கள். கரும்பின் உற்பத்திக்கும் சீனியின் உற்பத்திக்கும் மிக அதிக அளவில் நீர் தேவைப்படுகின்றது.

ஒரு கிலோ கரும்பின் உற்பத்திக்கு 210 லீற்றர் தண்ணீரைச் செலவிடவேண்டும். ஒரு கிலோ சுத்திகரிக்கப்பட்ட சீனியைத்தயாரிப்பதற்கு ஆயிரத்து 710 லீற்றர் தண்ணீரைநீங்கள்செலவிட வேண்டும். இவ்வளவு நீர்ச்செலவு மிக்க, இவ்வளவு நீர்த் தேவையுடைய கரும்பு உற்பத்தியையும் சீனித் தொழிற்சாலையையும் பேராறுகள் எதுவும் பாயாத வடக்கில் நாங்கள் கொண்டு வருவது பேராபத்தாகவே அமையும். நீர் பற்றாக்குறைவான இடமான வடக்கில், அதுவும் வருடம் முழுவதும் நீரை விநியோகிக்கவேண்டிய பல்லாண்டுப் பயிரான கரும்பை நாங்கள் வளர்த்தெடுப்பது என்பது எங்கள் மண்ணை விரைவிலேயே பாலைவனமாகமாற்றிவிடும்.

நீரிற்கு ஏற்படுத்தப்படும் சேதாரம் மட்டுமல்ல, கரும்பு உற்பத்திக்கென்று பயன்படுத்தப்படும்பெருமளவுவிவசாய இரசாயனங்களாலும் கடும் பாதிப்பிருக்கும். பீடைகொல்லிகளை, களைகொல்லிகளை விசிற வேண்டியிருக்கும். இவை வடக்கு நிலத்தடிநீரின்தரத்தில்பெரும் மாற்றங்களை ஏற்படுத்தும். நீரை மாசடையச் செய்யும்.

ஏற்கனவே வவுனியா மாவட்டம் சிறுநீரக நோய்த் தாக்கம் அதிகம் உள்ள மாவட்டம்என்றுஅடையாளப் படுத்தப்பட்டுள்ளது. குடிதண்ணீரில் கலந்துள்ள விவசாய இரசாயனங்களால்தான் வவுனியா மாவட்டத்தில் ஏராளமானோர்சிறுநீரகங்கள் செயலிழந்து அவதிப்பட்டு வருகின்றனர். அதுமட்டுமல்ல நாங்கள் அளவுக்கதிகமாக விவசாயஇரசாயனங்களைப் பயன்படுத்துகின்றபோது மண்ணில் இருக்கக்கூடிய நுண்ணங்கிகள் இறந்து நாங்கள் தொடர்ந்து அந்த இடத்தில் பயிர்செய்ய முடியாத அளவிற்கு மண் இறந்து கொண்டிருக்கும்; மலடாகிக் கொண்டிருக்கும்.

கந்தளாயில் தொடங்கப்பட்ட பெரும்சீனித்தொழிற்சாலை இன்று இழுத்து மூடப்பட்டுள்ளது. அதற்கான காரணம், அந்த மண்ணில் அதிக விளைச்சலைப் பெறக் கூடியளவிற்குக் கரும்மைப் பயிரிடமுடியாத நிலைமை ஏற்பட்டிருப்பதுதான். இதேநிலை வவுனியாவுக்கும் வரலாம்.

சீனித் தொழிற்சாலைக்கும் கரும்புச் செய்கைக்கும் என வவுனியா மாவட்டத்தில் ஒதுக்கப்பட்டிருக்கின்ற நிலப்பரப்பின் அளவு வவுனியா மாவட்டத்தின்மொத்தநிலப்பரப்பின் 6 விழுக்காட்டுக்கும் அதிகம். முதல் கட்டத்திற்கே இவ்வளவு நிலங்களையும் பெறுவதாயின் காடுகளைப் பெருமளவில்அழிக்கவேண்டியிருக்கும். இரண்டாம் கட்டத்திற்கு இன்னும் அதிகளவில் காடுகளை அழிக்க வேண்டி வரும்.

போர் காரணமாக எங்கள் மக்கள் இடம்பெயர்ந்து சென்றதன் பின்னர் அவர்களின் மேய்ச்சல் தரைகளில் மரங்கள் வளர்ந்ததைச் சாட்டாகவைத்து அவற்றையெல்லாம் காடுகள் என அடையாளப்படுத்தி எல்லைகளைப் போட்ட வனவளத் திணைக்களம் இப்பொழுது இந்தக் காடுகளை ஆட்சியாளர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க, சீனித் தொழிற்சாலை அமைக்க விடுவிப்பதற்கும் ஒப்புதல் கொடுத்துள்ளது.

இலங்கையைக் காலநிலை மாற்றம் மிக மோசமாகப்பாதிக்கும் என்று சொல்லிஎச்சரிக்கப்பட்டுள்ளது. காலநிலை மாற்றத்தினால் இலங்கைஎதிர்கொள்ளவுள்ள பிரச்சினைகள் ஏராளம் இருக்கின்றபோது, காடுகளைஅழித்துசீனித்தொழிற்சாலையை அமைப்பது என்பது ஒரு குருட்டுத்தனமான முடிவு.

அதுமட்டுமல்ல இதன் பின்னால் ஒரு தந்திரமும் ஒளிந்துகொண்டுள்ளது. எமது மக்களின் நிலங்கள் மீண்டும்அவர்களுக்குமீளக் கிடைக்காத வகையில், அபிவிருத்தி என்ற போர்வையில் அவற்றைக் கையகப்படுத்துவதும் இதன் பின்னால் உள்ள ஒரு நரித்தனமாகும்.

இத்தனை ஆபத்துக்களோடுகூடியசீனித்தொழிற்சாலையால்சிங்களக்குடியேற்றங்கள் அதிகமாக இடம்பெறுவதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாகவும்அஞ்சப்படுகின்றது. மகாவலி அதிகார சபை கந்தளாய்க் குளத்தைக் கையகப்படுத்தியுள்ளது. கந்தளாய்க் குளம் மகாவலியுடன் இணைக்கப்பட்டதற்குப் பின்னர் அந்தக் குளத்தை மையப்படுத்தி விவசாயச் செய்கைகள் மேற்கொள்ளப்பட்டு, அதனூடாகவே அங்கு சிங்களக் குடியேற்றங்கள் நிகழ்த்தப்பட்டன. தமிழ் நிலமான இந்தக் கந்தளாய் இதன்காரணமாகவேஇன்று முற்றுமுழுதாக ஒரு சிங்கள தேசமாக மாற்றப்பட்டிருக்கின்றது. இதேநிலை நாளை வவுனியாவுக்கும் வரலாம்.

கரும்புக்கு நீர்ப் பற்றாக்குறை இருக்கின்றது என்று சொல்லி, வவுனியாவில் இருக்கக்கூடிய குளங்களை மகாவலியுடன் இணைத்து அவற்றை மகாவலி அதிகார சபை கையகப்படுத்தலாம். மகாவலியினுடையநோக்கம் வறண்டபகுதிகளைவிவசாய பூமியாக மாற்றுவது என்று வெளிப்படையாகச் சொல்லப்பட்டபோதும் அதன் உள்ளார்ந்த திட்டம் சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்வதுதான். குடியேற்றங்களை மேற்கொள்ளும் போதுகூட குடியேற்றம் மேற்கொள்ளப்படும் இடங்களின் இன விகிதாசாரத்திற்கு ஏற்ப அல்லாமல்ஒட்டுமொத்த இலங்கையின்இனவிகிதாசாரத்திற்கு ஏற்பவே குடியேற்றங்களை மேற்கொள்வது என்பது மகாவலி அதிகார சபையினுடைய ஒரு எழுதப்படாத விதி.

மகாவலியிலிருந்து வடக்குக்குநீர் வருகின்றதோ இல்லையோ, எங்களுடைய குளங்களைமகாவலிஅதிகார சபை தன்னுடன் இணைத்துக் கையகப்படுத்துமாக இருந்தால் கண்டிப்பாகச் சிங்களக் குடியேற்றங்கள் வவுனியாவில் பெருமெடுப்பில் நிகழலாம். அதற்கான வாய்ப்பு அதிகமாக உண்டு.

அபிவிருத்தி அவசியம். போரால்பாதிக்கப்பட்டஎங்கள் மக்களின்வாழ்வாதாரத்தை, பொருளாதார நிலையை மேம்படுத்துவதற்கு அபிவிருத்தி அவசியம். ஆனால், இந்த மண்ணை அல்லது வடக்கு மண்ணினுடைய வளத்தையும் மக்களையும் பாதிக்காத ஏராளமான அபிவிருத்தித் திட்டங்கள் இருக்கத்தக்கதாக மோசமான பின்விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய சீனித் தொழிற்சாலையைவரவேற்பதுஎன்பது அறிவுடையோரின்செயலாக ஒருபோதும் இருக்காது.

உண்மையானதமிழ்த் தேசியப் பற்றாளர்களும் ஒருபொழுதும் இந்தச்சீனித் தொழிற்சாலையைவரவேற்க மாட்டார்கள்.

நாம்நீண்டதொருநெடிய வலி மிகுந்த போராட்டத்தை நிகழ்த்திய இனம். இந்த தமிழ்த் தேசியப் போராட்டம் என்பது எங்கள் மண்ணின் வளங்களைக் காப்பாற்றி அடுத்தடுத்து வருகின்ற தலைமுறைக்குபக்குவமாகக் கையளிக்க வேண்டியதையும் உள்ளடக்கியதுதான். இந்நிலையில்எங்களுடைய மண்ணையும்மக்களையும் பாதிக்கக்கூடிய, மண்ணை மக்களை மலடாக்கக்கூடிய, பாலைவனமாக்கக்கூடிய கரும்பு உற்பத்தி, சீனித் தொழிற்சாலை போன்ற திட்டங்களை நாங்கள் ஒருபோதும் அனுமதிக்க முடியாது, ஏற்றுக்கொள்ள முடியாது. இவற்றைக்கடுமையாக எதிர்க்க வேண்டும் என்பதே தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் நிலைப்பாடாகும் - என்றார்.

## புதிய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று கேள்வி எழுப்பப்பட்டதற்கே அவர் இந்தப் பதிலை அளித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும ஆகியோர் கேள்விகளை எழுப்பியிருந்தனர்.

எப்போது புதிய பொலிஸ் மா அதிபர் நியமிக்கப்படுவார் எனவும்அவர்கள்வினவினர்.

நாட்டில்குற்றச்செயல்கள் அதிகரித்துள்ள சூழ்நிலையில், பொலிஸ் மா அதிபர் ஒருவர் நியமிக்கப்படாமை சர்ச்சைக்குரிய விடயமாகும் எனவும், புதிய பொலிஸ்மா அதிபர் நியமிக்கப்படாமல் இருப்பதன்பின்னணிஎன்ன எனவும் அவர்கள் கேள்வி எழுப்பினர். (02)

## கடற்படைக்குக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுவீகரிக்க தாம் ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை என அப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். இதேவேளை வேலணை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மண்டைதீவு கிழக்கு பகுதியில் நிலை கொண்டுள்ளகடற்படையினர் அப்பகுதியில் தனியாருக்குச் சொந்தமான காணியிலேயே ஏற்கனவேமுகாமிட்டுள்ளனர்.

இதனை எதிர்த்து கடந்த காலங்களிலும் மக்கள் பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்திருந்தனர்.

இந்நிலையில் தற்போதும் குறித்த காணியைச் சொந்தமாக்கும்நோக்கில் அளவீட்டுப்பணிகளைஆரம்பிக்கப் போவதாக நில அளவைத் திணைக்களத்தினரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால்மக்களின்காணிகள் மக்களுக்கே உரியது. அதை நீதிக்குப் புறம்பாக அபகரிக்கமுனைவதுபொருத்தமற்றது. அந்த வகையில் குறித்தகாணிகளின் உரிமையாளர்களது கோரிக்கை நியாயமானதாகவே உள்ளது - என்றார்..

## கொக்குத்தொடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போராட்டத்தில் பல டசின் கணக்கானவர்கள் கலந்து கொண்டனர். பொது அமைப்புக்கள், சூழலி யல் மற்றும் சமூக அபிவிருத்திக்கான நிறுவனம் என்பன இணைந்து முன்னெடுத்த இவ்வார்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள்,சர்வதேசதர நிர்ணயங்களுக்கு அமைவாகப் புதைகுழி தோண்டப்படவேண்டும் என்று வலியுறுத்தினர்.

அத்தோடு சர்வதேச கண்காணிப்புடனும் புதைகுழிதோண்டப்படவேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தினர்.

"இலங்கை அரசே உன் கையில் ஒப்படைத்த உறவுகள் எங்கே?", "காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி வேண்டும்", "கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வில் கண்காணிப்பு வேண்டும்", உள்ளிட்ட பதாகைகளைத் தாங்கியவாறு போராடக்காரர்கள் குரல் எழுப்பினர்.

வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன், புதுக்குடியிருப்புபிரதேசசபை முன்னாள் உறுப்பினர் இ.சத்தியசீலன், சமூகச் செயற்பாட்டாளர் அன்ரனி ஜெயநாதன் பீற்றர் இளஞ்செழியன் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர்.

## ஜனாதிபதித் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடிவெடுப்போம்.

தேர்தலுக்குமுன்னதுவும் நடக்கலாம். இப்போது ஒரு தீர்மானம் எடுத்தாலும் அதைத் தேர்தலில் மாற்ற வேண்டிஏற்படலாம்.அதனால் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர்தான் முடிவெடுப்பது ஆரோக்கியமானது.' - என்று அவர் மேலும் தெரிவித்தார். (02)

## இலங்கை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சீறிப் பாய்ந்தார் பொது ஜன பெரமுனவின்நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர. நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்றவானூர்திமூலம் ஏற்றிச் செல்லல் (திருத்தச்) சட்டமூலம்-இரண்டாம்மதிப்பீடு மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

பௌத்த மரபுரிமைகளைப் பாதுகாக்க சிங்கள மக்கள்ஒன்றிணையவேண்டும் எனவும் அவர் அழைப்பு விடுத்தார்.

குருந்தூர்மலையில் நீதிமன்ற உத்தரவை மீறி விகாரைக் கட்டுமானங்கள் மேற்கொள்ளப்பட்டனஎன்கிற முறைப்பாடு தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி அங்கு நேரில் சென்றிருந்தார். அப்போது அங்கு சென்றிருந்தனர் நாடாளுமன்ற உறுப்பினர் சரத்வீரசேகர உள்ளிட்ட குழுவினர். நீதிபதியின் விசாரணையின் இடையே குறுக்கிட்டு சரத்வீரசேகர கருத்துத் தெரிவிக்க முயன்றபோது, இங்கேநீதிமன்றவிசாரணை இடம்பெறுகின்றது உங்களுக்குக் கருத்துக்கூற அதிகாரம் இல்லை என்று தெரிவித்த நிதிபதி அவரையும் அவரது குழுவினரையும் அந்த இடத்திலிருந்து விலகியிருக்கும்மாறு கட்டளையிட்டார். அந்தக் கோபத்தையே அவர் நாடாளுமன்றத்தில் நேற்றுக் காண்பித்தார்.

தனது உரையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேசிய நல்லிணக்கத்துக்கும்,தேசிய பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல் ஏற்படுத்தும் செயற்பாடுகள் தற்போது தீவிரமடைந்துள்ளன.

இலங்கை சிங்கள பௌத்த நாடு.வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 2000 வருடகால பழமையானதொல்பொருள் மரபுரிமைகள் பரவலாக காணப்படுகின்றன.குருந்தூர் மலையில் பௌத்த மரபுரிமைகள் உள்ளன.

குருந்தூர் மலைக்கு நாங்கள் அண்மையில் சென்றிருந்தபோது அவ்விடத்துக்கு வருகை தந்திருந்த முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி நாங்கள் விசாரணைக்கு இடையூறு விளைவிக்கின்றோம் என்று குறிப்பிட்டு எம்மை வெளியேறுமாறு உத்தரவிட்டார்.

அத்துடன் குருந்தூர் விகாரையில் வழிபாட்டில் ஈடுபட வருகை தந்த பௌத்த தேரரையும்வெளியேறுமாறு உத்தரவிட்டார். நீதிபதியின் செயற்பாட்டைஏற்றுக்கொள்ள முடியாது.

குருந்தூர்மலைவிகாரையின்தொல்பொருள்மரபுரிமை தொடர்பில் கேள்வி எழுப்பும் அதிகாரம் இந்தத் தமிழ் நீதிபதிக்குக் கிடையாது. அத்துடன் குருந்தூர் மலையில் இருந்து எம்மை வெளியேறுமாறு குறிப்பிடும் அதிகாரமும் அவருக்கு இல்லை. இலங்கை சிங்கள பௌத்த நாடு என்பதைத் தமிழ் நீதிபதி நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் திட்டமிட்ட வகையில் பௌத்த மரபுரிமைகள்அழிக்கப்படுகின்றன. அதற்கு ஒருசில நீதிபதிகளும் ஆதரவு வழங்குகிறார்கள்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி அரசமைப்பின் 9 ஆவது அத்தியாயத்தைமுழுமையாகமீறியுள்ளார் என்பதையும் உயரிய சபை ஊடாக குறிப்பிட்டுக் கொள்கிறேன்.

பௌத்த தொல்பொருள் மரபுரிமைகளை அழித்து அதன்மீதுதிரிசூலம்உட்படமத அடையாளங்கள்பொறிக்கப்பட்டுள்ளன. குருந்தூர்மலையிலும் இவ்வாறான தன்மையே காணப்படுகிறது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள தொல்பொருள் மரபுரிமைகளைப் பாதுகாக்க, சிங்கள பௌத்த மக்கள் ஒன்றிணையவேண்டும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தமிழ் பௌத்தர்கள் வாழ்ந்தார்கள் என்று குறிப்பிடப்படுகிறது.தமிழ் பௌத்தர்கள் வாழ்ந்தார்கள் என்றால் ஏன் பௌத்த மத மரபுரிமைகளை அழித்து அதன் மீது திரிசூலத்தை அமைக்க வேண்டும்.வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள தொல்பொருள் மரபுரிமைகளை பாதுகாக்க ஆட்சியாளர்கள் விசேட கவனம் செலுத்தவேண்டும் - என்றார்.

## O/L, A/L பரீட்சை காலம் அறிவிப்பு

2023ஆம் ஆண்டுக்கான ஜி.சீ.ஈ. சாதாரண தர மற்றும்உயர்தரப்பரீட்சைகள் இடம்பெறும் காலம் குறித்த அறிவிப்பை கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த வெளியிட்டுள்ளார்.

அந்த வகையில் உயர்தரப் பரீட்சை இந்த வருடத்தின் இறுதிக்கு முன்னர் நடைபெறும் என்று கல்வி அமைச்சர் அறிவித்துள்ளார்.

அதேவேளை, இந்த வருடம் டிசம்பர் மாதம் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்த சாதாரண தரப் பரீட்சை 2024ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் நடைபெறும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (02)

## அண்ணனைக் குத்திக் கொன்ற தம்பி

மூத்த சகோதரரை இளைய சகோதரர் கத்தியால் குத்திப் படுகொலை செய்துள்ளார். இந்தக் கொடூர சம்பவம் பொலன்னறுவையில் வியாழன் இரவு இடம்பெற்றது 25 வயதுடைய நபரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் படுகாயங்களுடன் தெஹியத்த கண்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

கொலையாளியான இளைய சகோதரரைக் கைது செய்துள்ளமானம்பிட்டிய பொலிஸார், விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பொலிஸாரின் தொடக்க விசாரணையில் இளைய சகோதரர் மனநலம் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருபவர் என்பது தெரிய-வந்துள்ளது. (02)

## வீட்டில் மின்சாரம் தாக்கி கணவன், மனைவி சாவு!

மின்சாரம் தாக்கிக் கணவனும் மனைவியும் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர். இந்தச் சம்பவம் வியாழன் இரவு கொழும்பு, கொலன்னாவையில் இடம்பெற்றது.

படுக்கை அறையில் பழுதடைந்தமின்விசிறியைத் திருத்தும்போதே இருவரும் மின்சாரம் தாக்கிச் சாவடைந்துள்ளனர்.

71, 68 வயதுடைய வயோதிபதித் தம்பதியினரே இதன்போது உயிரிழந்துள்ளனர்.சம்பவம்தொடர்பில் பொலிஸாருக்கு வீட்டுப் பணிப்பெண் தகவல் தெரிவித்ததையடுத்து அங்கு விரைந்த பொலி-ஸார் சடலங்களை மீட்டு வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைத்துள்ளனர்.

வீட்டுப் பணிப் பெண்ணிடம் வாக்கு-மூலத்தைப் பெற்ற பொலி-ஸார், சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (02)

## இரத்மலானை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து தெரிவித்ததாவது:

கொரோனா வைரஸ் பரவல் நெருக்கடி நிலையின் பின்னர் இலங்கைக்கான விமான சேவைகள் அதிகரித்துள்ளன. சைனா ஈஸ்டன் எயார் முன்னர் ஒரு வாரத்திற்கு ஒரு விமான சேவையையே நடத்தியது. அது தற்போது ஐந்தாக அதிகரித்துள்ளது.

அதேபோன்று 14 ஆக இருந்த எமிரேட்ஸ் எயார் லைன் விமான சேவை 28 ஆகவும் நான்காக இருந்த எத்தியான் விமான சேவை ஆறாகவும் அதிகரித்துள்ளன.

அத்துடன் 21 ஆக இருந்த கட்டார் விமான சேவை தற்போது 35 ஆக அதிகரித்துள்ளது. எயார் அரேபியா ஏழு விமான சேவைகளை தற்போது 11 ஆக அதிகரித்துள்ளது. எயார் ஏசியா ஏழு சேவைகளை தற்போது பதினொன்றாக அதிகரித்துள்ளது. அதேபோன்று ஏர் இந்தியா 16 சேவைகளை தற்போது 17 ஆக அதிகரித்துள்ளது. அவை தவிர்ந்த மேலும் பல விமான சேவை நிறுவனங்கள் இலங்கைக்கான விமான சேவைகளைத் தொடங்கியுள்ளன. அந்த வகையில் இது ஒரு சிறந்த சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளது.

அத்துடன் இண்டிகோ உள்ளிட்ட விமான சேவை நிறுவனங்களுடன் பேச்சு நடத்தியுள்ளேன் அதன் மூலம் யாழ்ப்பாணத்திற்கான விமானசேவைகளைமேலும் அதிகரிக்க முடியும்.

அதேவேளை மக்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் பலாலி விமான நிலையஓடுபாதைவிரிவாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அதற்காக இந்திய அரசு நிதி உதவி வழங்க இணக்கம் தெரிவித்துள்ளது. ஜனாதிபதியின் இந்தியப் பயணத்தின்போது அது தொடர்பில் பேச்சு நடத்துவார்.

கராச்சி நேபாளம், கொங்கோ இராச்சியம் ஆகிய வற்றுடன் விமான சேவைகளைஆரம்பிப்பதுதொடர்பில் பேச்சுவார்த்தை நடத்த இருக்கிறோம். இவ்வாறான விமான சேவைகள் மூலம் நாட்டுக்கு வருகை தருகின்ற உல்லாசப் பிரயாணிகள், முதலீட்டாளர்கள்மற்றும்தேசிய ரீதியிலான வர்த்தகர்கள் சிறந்த பயன்களைப்பெற்றுக் கொள்ள முடியும் - என்றார்.

## ஒலுவில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எல்.எச்.ஐ. நிறுவனம் தொடர்பில் கவனத்துக்கு கொண்டுவந்தமைதொடர்பில் நன்றி தெரிவிக்கிறேன். ஒலுவில் துறைமுகம் மாத்திரமன்றி நாட்டில் இருக்கின்ற ஏனைய சில இடங்களிலும் கடல் அரிப்பு தொடர்பான ஆய்வுகள் சரியாக இடம்பெறவில்லை. அரசியல் காரணங்களுக்காக அந்த ஆய்வுகள் மறுதலிக்கப் பட்டதாக என்னால் அறிய முடிந்தது.

அத்துடன் ஒலுவில் தொடர்பில் எனக்கு எழும் கேள்வி என்ன வென்றால், இந்த துறைமுகம் கடந்த 10 வருடங்களாக பயன்பாட்டில் இல்லை. அப்படியானால்அந்த இடம்அடைக்கப்பட்டுவிட்டது. அடைக்கப்பட்ட பின்னரும் ஏனைய இடங்களில் கடல் அரிப்பு இடம்பெறுவதாக இருந்தால், அது துறைமுக அலைகரை காரணமாகவா அல்லது இயற்கை காரணமாகவா என்பதே அந்தக் கேள்வி. அது தொடர்பாகவும் ஆராய வேண்டி இருக்கிறது.

சம்பந்தப்பட்டவர்களுடன் நாங்கள் இது தொடர்பாக கலந்துரையாட இருக்கிறோம். அதன்போது உங்களுக்கும் அழைப்பு விடுப்போம். அதில் உங்களது கருத்துக்களை தெரிவிக்க முடியும் - என்றார்.

# இலஞ்சம் வழங்குவதும் குற்றம்; வாங்குவதும் குற்றம் மாற்றத்துக்கு சகலரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்

## வெளிவிவகாரத்துறை அமைச்சர் அலிசப்ரி கோரிக்கை

இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக் குழுவால் மாத்திரம் ஊழலை ஒழிக்க முடியாது. நாட்டு மக்கள் முழுமையான ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

இலஞ்சம் வாங்குவதும் குற்றம், இலஞ்சம் வழங்குவதும் குற்றம் என்பதை மக்கள் தெரிந்துக் கொள்ள வேண்டும். சட்டம் இயற்றிய பின்னர் ஓரிரு இரவில் மாற்றத்தை ஏற்படுத்த முடியாது.

சிறந்த மாற்றத்துக்கு சகலரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என வெளிவிவகாரத்துறை அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற ஊழல் எதிர்ப்பு சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

குற்றச்செயல்களுக்குப் பலியாக் கப்பட்டோருக்கும், சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு சட்டமூலம் தொடர்பில் பல்வேறு தரப்பினர் கடந்த காலங்களில் யோசனைகளை முன்வைத்துள்ளார்கள்.

குற்றச்செயல்களால் பாதிக்கப்பட்ட வர்கள் மற்றும் சாட்சியாளர்களின் உளவி யல் நிலை பாதுகாக்கப்பட வேண்டும். இந்த புதிய சட்டமூலத்துக்கு அமைய சாட்சி யாளர்கள் மற்றும் குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படும்.

விசேட சட்ட நிபுணர்களின் வழி நடத்தலுக்கு அமையவே இந்த சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது. ஊழல் எதிர்ப்பு சட்டமூலம் நாட்டு மக்களின் கோரிக்கைக்கு அமைய தயாரிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி சட்டத்தரணி சரத் ஜயமான்ன தலைமையிலான குழுவால் ஊழல் எதிர்ப்பு சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது. 2004 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் ஊழல் ஒழிப்பு சாசனத்துக்கு அமைவாகவே ஊழல் எதிர்ப்பு சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந் தனைக்கு அமைய ஊழல் எதிர்ப்பு சட்ட-மூலம் தயாரிக்கப்பட்டுள்ளது என விமர் சித்துக் கொண்டிருப்பதைக் காட்டிலும் சட்டமூலத்தை இயற்றுவது தொடர்பாக அவதானம் செலுத்த வேண்டும். ஒரு சட்டமூலத்தை முழுமையாகத் தயாரிக்க வேண்டும் என்று குறிப்பிட்டுக் கொண்டு இருந்தால் ஒருபோதும் சட்டத்தை இயற்ற முடியாது. பயங்கரவாதத் தடைச்சட்டத்தைக் கட் டம் கட்டமாக



மாற்றியமைக்க ஆரம்பக்கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பயங்கரவாதச் செயற்பாடுகளுடன் தொடர்புடையவர்கள் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டு, தற் போது நிலைமை கட்டம் கட்டமாக மாற் றமடைந்துள்ளது சிறந்த நிலையாகும்.

ஹொங்கொங் நாட்டில் உள்ள ஊழல் எதிர்ப்பு சட்டத்துக்கு இணையாக ஊழல் எதிர்ப்பு சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி சட்டத்தரணி சரத் ஜயமான்ன தெரிவித்தார். சட்டத்தை இயற்றிக் கொண்டால் மாத்திரம் எதிர்பார்க்கும் இலக்கை அடைய முடியாது. இயற்றப்படும் சட்டங்கள் முறையாக செயற்படுத்தப்பட வேண்டும். நல்லாட்சி அரசாங்கம் அரசி யல் காரணிகளை முன்னிலைப்படுத்தி பலருக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் சுமத் தப்பட்டு விசேட நீதிமன்றங்கள் ஊடாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. இறுதியில் எந்த குற்றச்சாட்டுக்களும் நிரூபிக்கப்படவில்லை. ஆளும் தரப்பினர் எதிர்தரப்பினரை திருடன் என்பதும், எதிர் தரப்பினர் ஆளும் தரப்பினரை திருடன் என்று விமர்சிப்பதும் வழமையாகியுள்ளது. நாட்டு மக்கள் ஒட்டுமொத்த அரசியல்வாதி களையும் விமர்சிக்கிறார்கள்.

இலங்கையின் ஊழல் தொடர்பில் சர்வதேச மட்டத்தில் பேசப்படுகிறது. ஆகவே, விமர்சனங்களை முன்வைத்துக் கொண்டிருக்காமல் சட்டமியற்ற அனைவ ரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். ஊழல் எதிர்ப்பு சட்டத்தை இயற்றியதன் பின்னர் ஊழல் ஒழிப்புக்கான பௌதீக மற்றும் மனித வளங்கள் வழங்கப்பட வேண்டும்.

தகவல் வழங்குநர் என்று குறிப்பிட்டுக் கொண்டு வியாபாரம் செய்பவர்கள் உள்ளார்கள். ஆகவே தகவல் வழங்குநர் தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டும். உறுதியான தகவல்க ளுடன் ஊழல் மோசடி தொடர்பான குற் றச்சாட்டுக்களை தகவல் வழங்குநர்கள் முன்வைக்க வேண்டும். சகலரும் திருடன் என்று குறிப்பிடுவது உண்மை யான திருடனின் பாதுகாப்பு கவசமாக காணப்படுகிறது. ஆகவே திருடர்களைப் பாதுகாக்கும் சூழலை மக்கள் ஏற்படுத்தக் கூடாது. நீதிமன்ற செயற்பாடுகளையும், ஆணைக்குழுக்களையும் அரசியலாக்கா மல் இருந்தால் சகல சட்டங்களையும் சிறந்த முறையில் செயற்படுத்த முடியும். அரசியல் நோக்கத்துக்காக பொய் குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதும், அரசியல் அழுத்தத்தால் குற்றவாளிகள் சட்டத்தில் இருந்து தப்பித்துக் கொள்வதும் இரண்டும் தவறானவையே. இவ்விரு முறைமையும் மாற்றியமைக் கப்பட வேண்டும். இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் மாத்திரம் ஊழலை ஒழிக்க முடியாது. நாட்டு மக்கள் முழுமை யான ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இலஞ்சம் வாங்குவதும் குற்றம், இலஞ்சம் வழங்குவதும் குற்றம் என்பதை மக்கள் தெரிந்துகொள்ள வேண்டும். சட்டம் இயற்றிய பின்னர் ஓரிரு இரவில் மாற் றத்தை ஏற்படுத்த முடியாது. சிறந்த மாற் றத்துக்கு சகலரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். - என்றார். (05)

# முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்ட திருத்தங்களை நீதி அமைச்சர் விஜயதாஸவிடம் நாம் கையளித்தோம்

## ரிஷாத் சபையில் தெரிவிப்பு

முஸ்லிம் விவாக, விவாகரத்து சட்டம் தொடர்பில் முன்னாள் நீதி அமைச் சர் அலிசப்ரி அமைத்த குழுவினர் சமர்ப் பித்த ஆலோசனைகளில் உடன்பட முடியாதென்பதால் 18 முஸ்லிம் எம். பி.க்கள் கையொப்பமிட்டு பௌசி எம்.பி. தலைமையில் முஸ்லிம், விவாக, விவாகரத்து சட்டம் சம்பந்தமான திருத் தங்களை நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவிடம் வியாழக்கிழமை கைய ளித்தோம்.

அததுடன் அரச சார்பற்ற நிறு வனங்களின் முகவர்களாகச் செயற்படும் சிலரே இஸ்லாம் பெண்களின் உரி மையை மறுக்கின்றதென பிரசாரம் செய்து வருகின்றனர் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.


நாடாளுமன்றத்தில் வியாழக் கிழமை (6) இடம்பெற்ற ஊழல் எதிர்ப்பு சட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பீடு மீதான இரண்டாம் நாள் விவா தத்தில் கலந்துகொண்டு உரையாற் றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற் றுகையில் -

சுதந்திரத்தின் பின்னர் நாடு நாச மடைவதற்கு அரசியல்வாதிகளும் ஆட்சி பீடங்களில் இருப்பதற்காக தேவைக்கேற்ப தங்களுடைய மக் களை ஏமாற்றி இனவாதங்களையும் மதவாதங்களையும் ஏற்படுத்தி இந்த நாட்டை குட்டிச்சுவராக்கி விட்டனர்.

நாடு வங்குரோத்து நிலைக்கு தள்ளப்பட்டு நாம் மிக வேதனையான ஒரு கால கட்டத்தில் இருக்கின்றோம். இவ்வாறான நிலையில் நாட்டு மக்களின் பெரியதொரு எதிர்பார்ப்பே நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவின் ஒரு சட்டமூல மாக சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது, இது காலத்தின் தேவை.

தேவையான ஒன்றை தேவையான நேரத்தில் கொண்டுவந்துள்ளீர்கள்.



ஆனால் அது பாரபட்சம் இல் லாமல் நடை முறைப்படுத்தப் படுமாக இருந் தால் நிச்சயமாக அது நாட்டுக்கு நல்லதாக அமை யும்.

அதனால் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவிடம் 18 முஸ்லிம் எம்.பி.க்கள் கையொப்பமிட்டு பௌசி எம்.பி. தலைமையில் முஸ்லிம், விவாக, விவாகரத்து சட்டம் சம்பந்தமான திருத்தம் சம்பந்தமாக ஓர் ஆவணத்தை கையளித்துள்ளோம்.

முன்னாள் நீதி அமைச்சர் அலிசப்ரி அமைத்த குழுவினர் சமர்ப்பித்த ஆலோசனையை நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ அண்மையில் நாடாளுமன்றத்தில் முஸ்லிம் எம். பி.க்களிடத்தில் ஒப்படைத்தார்.

இதில் பல விடயங்கள் எங்களால் உடன்பட முடியாத விடயங்களாக இருந்தமையால் அதில் குறிப்பாக முஸ்லிம் என்ற பெயர் அதாவது சொல் நீக்கப்பட்டு முஸ்லிம் நபர் என்று போடப்பட்டிருந்தது. நிக்கா என்ற வசனம் முற்றாக நீக்கப்பட்டு, நிச்சயப்படுத்தல் என்ற சொல் போடப்பட்டிருந்தது.

அதேபோன்று வழி (பெண்ணின் பாதுகாவளர்) தந்தை, தந்தை சார்ந்த அல்லது சகோதரன் அல்லது தாயின் சகோதரன் போன்ற வகையிலே இருக்க வேண்டும்.

ஆனால் வழி முற்றாக அகற்றப்பட்டு, அதாவது பெண் விரும்புகின்ற ஒருவரை வழியாக இருக்கலாம் என்று போடப்பட்டிருந்தது.

அதுமட்டுமன்றி இன்னும் பல விடயங்களில் எங்களினால் உடன்பட முடியாது என்பதை நீதி அமைச்சரிடம் நாம் சுட்டிக்காட்டியபோது அவர் நீங்கள் எல்லோரும் ஒன்றுகூடி உங்களின் திருத்தங்களை ஆலோசனைகளை முன்வையுங்கள் .இதனை இன்னும் காலதாமதப்படுத்த முடியாது என்று கூறினார்.

அந்த அடிப்படையில் பௌசி எம்.பி. தலைமையில் எங்களின் எம்.பி.க்கள், அகில இலங்கை ஜம்மியத்துல் உலமாவையும் இங்கு அழைத்து அவர்களுடன் ஒரு கலந்துரையாடலை ஏற்படுத்தி இந்த விடயங்களில் இஸ்லாமிய ரீயாவுக்குள் உள்ளடங்கிய திருத்தங்களை நீதி அமைச் சரிடம் கையளித்துள்ளோம்.

20 முஸ்லிம் எம்.பி.க்கள் இங்கி ருக்கின்றார்கள் அதில் 18 பேர் கையொப் பமிட்டு இதனை கையளித்துள்ளோம். எனவே, நீதி அமைச்சர் எமது வேண்டுகோளை ஏற்று செயற்பட வேண்டும் எனக் கேட்கிறோம்.

அரச சார்பற்ற நிறுவனங்களின் முகவர்களாக செயற்படும் சிலர் இஸ்லாம் பெண்களின் உரிமையை மறுக்கின்றதென சொல்லுகின்றனர். இஸ்லாம் பெண்களைக் கற்பதற்கு அனுமதிக்கின்றது. இஸ்லாமிய பெண் கள்தான் மருத்துவர்களாக, பொறியி-யலாளர்களாக பல துறைகளில் உயர்ந் திருக்கின்றார்கள்.

ஆகவே, இஸ்லாமிய மார்க்கம் பெண்களை எங்கும் கட்டுப்படுத்த வில்லை. ஆனால் இஸ்லாமிய ரீஆவில் ஒரு வரையறை இருக்கின்றது. எதை செய்ய வேண்டும், எதை செய்-யக்கூடாது ,எது ஆண்களுக்குரியது, எது பெண்களுக்குரியது என்றெல்லாம் சொல்லப்பட்டுள்ளது.

எனவே, இந்த விடயத்தில் நீதி அமைச்சர் நேர்மையாக செயற்பட வேண்டும். 22 லட்சம் முஸ்லிம்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்புத்தான் அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா. அவர்களின் ஆலோசனைகளைப் பெற்றுத்தான் இந்த திருத்தங்களை முன்வைத்துள்ளோம்.எனவே இதனை நியாமாக ஏற்று செயல்படுத்துங்கள். - என்றார். (05)

# திருடப்பட்ட சொத்துக்களை மீளப்பெறவும் புதிய சட்டம் கொண்டுவரப்படல் வேண்டும்

## ஹக்கீம் வலியுறுத்து

ஊழல்மோசடிகளைத் தடுப்ப தற்கு புதிய சட்டம் கொண்டுவருவது போல் திருடப்பட்ட சொத்துக்களை மீள பெற்றுக்கொள்ளவும் புதிய சட்டம் கொண்டுவர வேண்டும்.

அதேபோன்று கடந்த காலங்களில் இடம்பெற்ற மோசடிகள் தொடர்பாக ஆராயவும் இதனுடன் விசேட ஏற்பாடாக இணைத்துக்கொள்ளப்பட வேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலை வர் ரவூப் ஹக்கீம் தெரி வித்தார்.


நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற ஊழல் எதிர்ப்பு சட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பீடு மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற் றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் -

நாட்டில் உள்ள ஊழல் மோசடிகளை நீக்க வேண்டும் என சர்வதேச நாணய நிதியம் நிபந்தனை விதித்திருக்கிறது. என்றாலும் சர்வதேச நாணய நிதியத் தின் மீளாய்வுக்குள் எமது நாடு ஆசிய நாடுகளிலேயே முதலாவது நாடாக இடம் பிடித்திருக்கிறது.

அதனால் அரசாங்கம் இந்த சட்டத்தில் மாற்றங்களை கொண்டுவர நிர்ப்பந்திக் கப்பட்டிருக்கிறது.

அத்துடன், இலங்கைக்கு எதிரான ஜெனீவா பிரேரணை யிலும்கூட எமது நாட்டில்



ஏற்பட்ட பொருளாதார குற் றச்செயல்கள் தொடர்பாகக் கவனம் செலுத்துமாறு கூறி இருந்தார்கள்.

பொருளாதாரக் குற்றங் கள் தொடர்பாக கவனம் செலுத்துமாறு மனித உரிமை கள் ஆணைக்குழுவும் இலங்கைக்கு தெரிவித்தி ருந்தது.

அதனால் ஊழல் மோசடி குற்றச்செயல்கள் தொடர்பாக எமது நாடு பெயர் பெற்றுள்ளது. அதனால் சொத்துக்கள் மற்றும் பிரகடனங்கள் பற்றிய அனைத்தையும் உள் ளடக்கியதாக இந்த ஊழல் எதிர்ப்பு புதிய சட்டமூலத்தை கொண்டுவர வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

மேலும், தனியார் துறைகளில் ஏற்படும் ஊழல் மோசடிகள் விளையாட்டுத்துறையில் ஏற்படும் மோசடிகள் மற் றும் பாலியல் இலஞ்சம் அதேபோன்று வெளிநாட்டு வேலைவாய்ப்புகளின் போது ஏற்படும் மோசடி போன்ற பல புதிய விடயங்கள் இதில் உள்வாங்கப்பட்டிருக் கின்றன.

அதேபோன்று நாங்கள் திருடப்பட்ட சொத்துக்களை மீள பெற்றுக்கொள்வதற் கானதொரு சட்டமூலத் தையும் கொண்டுவர வேண்டும்.

இந்த சட்டமூலத் தின் பின்னர் நாங்கள் மேற் கொள்ள வேண் டிய விடயங்களும் நாணய நிதியத் தின் நிபந்தனைகளில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. அடுத்த வருடம் மார்ச் வரை அதற்கான காலம் இருக்கிறது. அதுவரை நாங்கள் காத்தி ருக்க வேண்டியதில்லை.

எனவே, திருடப்பட்ட சொத்துக்களை மீளப்பெற்றுக் கொள்ள முடியுமான ஒரு சட்டமூலம் விரைவாகக் கொண்டுவரப்பட வேண்டும். சட்ட ரீதியில் அதனை திருப்திகரமான முறையில் மீட்க முடியுமான ஒரு நடவடிக்கையை நாங்கள் கையாள வேண்டும். எமது நாட்டில் ஊழல் மோசடிகளை இல்லாம லாக்க, இது மிகவும் முக்கிய மானதாகும். அதேபோன்று கடந்த காலங்களில் இடம்பெற்ற குற்றச்செயல்கள் தொடர்பாக ஆராயவும் இதனுடன் விசேட ஏற்பாடாக இணைத்துக்கொள்ளப்பட வேண்டும் என கேட்டுக் கொண்டுள்ளோம்.

என்றாலும் இது தொடர்பாக எமக்கு இன்னும் பதில் வழங்கப்பட வில்லை. -என்றார். (05)


# முல்லை குருந்தூர் மலை கல்வெட்டை முடிந்தால் யுனெஸ்கோ தொல்பொருள் ஆய்வுக்குட்படுத்துக

## சிறிதரன் அரசுக்கு சவால்

முல்லைத்தீவு மாவட்டம் குருந்தூர்மலையில் 4 ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட "கல்வெட்டு" எனத் தொல்லியல் திணைக்களத்தால் ஆதார மாக காட்டப்படும் "செங்கல்" எவ்வாறு போலியாக உருவாக்கப்பட்டதென கேள்வியெழுப்பிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் சபையில் பல விடயங்களைக் கூறியமையுடன் அந்த "கல்வெட்டு" உண்மையில் 4 ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதுதான் என்றால் யுனெஸ்கோவையும் சர்வதேச தொல்பொருள் ஆய்வாளர்களையும் அழைத்து ஆய்வு செய்ய அரசு தயாரா எனவும் சவால் விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற ஊழல் எதிர்ப்பு சட்டமூலம் மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றும் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற் றியவை வருமாறு -



இலங்கையில் தமிழர்களும் தேசிய இனம் என்பதை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும். சிங்கள மக்களின் அடையா ளத்தையும் மத, உரிமைகளையும் மதிக்கிறோம்.

எமது உரிமைகளையும் அடையாளங்களையும் அழித்து சிங்கள இனத்தை மேம்படுத்த தமிழர்களின் தொன்மையை அழித்து பௌத்த மயமாக்கலை விரிவுப்படுத்துவது முறையற்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் குருந்தூர் மலையில் நிர்மாணிக்கப்படும் விகாரை பகுதிக்கு நேரடியாக சென்று நீதியரசர் பார்வையிட்டுள்ளார். அங்கிருந்த ஆதி சிவன் ஆலயம் உடைக்கப்பட்டு, அழிக்கப்பட்டு அங்கு புதிய கல்வெட்டு உருவாக்கப்பட்டுள்ளது. அங்கு எவ்வாறு இவ்வாறு கல்வெட்டு வந்தது? புத்தர் விகாரை அமைக்க முன்னர் நானும் சார்ள்ஸ் நிர்மலநாதனும் குருந்தூர் மலை பகுதிக்கு சென்றிருந்தோம். ஆலயங்கள் உடைக்கப்பட்டதை எமது கண்களால் கண்டோம். இவ்வாறான நிலையில் புதிய கல்வெட்டு அமைக்கப்பட்டுள்ளது. சீமெந்து கற்களை அறுத்து அதன் மேல் செங்கல் துகள்களை பூசி அதனை புராதன கல்வெட்டாக மாற்றியுள்ளனர். இவ்வாறு செய்து விட்டு இது ஒரு பழைய செங்கல், அது 4 ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட செங்கல் என கதை பரப்புகின்றனர். இது அப்பட்டமான பொய். அங்கே அறுக்கப்பட்ட தூண்களை நாம் எமது கண்களால் கண்டோம். சீமெந்து கற்களை கிரவலுக்கு மேலே அறுத்து அந்தக்கிரவலை பழைய கல்லுப்போல் காட்டி அங்கேயுள்ள பாசித்தண்ணியை ஊற்றி அதனை ஒரு பழைய தொல்பொருள் விகாரை போல் காட்டும் முயற்சியில் தொல்பொருள் திணைக்களமும் படைகளும் அரசும் போலி வேலையை செய்தன என்பதை இந்த உயரிய சபையில் நான் பொறுப்புடன் கூறுகின்றேன்.

நாங்கள் குறிப்பிடுவது பொய் என்றால் - அந்த கல்வெட்டு 4 ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதுதான் என்றால் - யுனெஸ்கோவை சர்வதேச தொல்பொருள் ஆய்வாளர்களை அழைத்து ஆய்வு செய்வதற்கு நீங்கள் தயாரா? அவர்கள் வந்து ஆய்வு செய்து நீதி யைச் சொல்லட்டும்.

பண்பாட்டு, கலாசாரம் மற்றும் மத ரீதியில் நாம் தொடர்ச்சியாக அழிக்கப்படுகிறோம். ஆகவே, சர்வதேச அமைப்புக்கள், மனச்சாட்சி உள்ள நிறுவனங்கள் எமக் காக கண் திறக்க வேண்டும் என்பதை இந்த உயரிய சபை ஊடாக வேண்டுகோளாக விடுக்கின்றேன். - என்றார். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## சரத்வீரசேகர போன்றவர்கள் கண்டிக்கப்படுவது அவசியம்

**குருந்தூர் மலையில் நடந்த நீதிமன்ற விசாரணையில் தலையிடவேண்டாம் என்று பொது ஜன பெரமுன நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகரவை ஒதுங்கியிருக்க முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி உத்தரவிட்டமையை எதிர்த்து நேற்று நாடாளுமன்றத்தில் அவர் ஆற்றிய உரை கண்டனத்துக்குரியது.**

**குருந்தூர்மலையில் இருந்த தொல்பொருள் அடையாளங்கள் ஒரு விகாரைக்குரியன என்று தெரிவித்து அதன் மீது அவசர அவசரமாக புதிய விகாரை ஒன்று அமைக்கப்பட்டது. குருந்தூர்மலையில் உள்ள சைவ வழிபாட்டிடத்திற்குச் செல்வதற்குத் தடை விதித்து தமிழர்களுக்கு இடைஞ்சல்களை ஏற்படுத்தும் தொல்லியல்திணைக்களம், தரைப்படையினரின் துணையுடன் குருந்தூர்மலை விகாரைக் கட்டுமானத்தை விரைவாக மேற்கொண்டதுடன் அங்கு பௌத்தர்கள் வழிபடவும் அனுமதித்தது.**

**இந்தவேற்றுமையை, சிறுமைப்படுத்தல் நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டபோது விகாரைக் கட்டுமானப் பணிகளை அப்படியே நிறுத்துமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றம் தொல்லியல் திணைக்களத்திற்கு உத்தரவிட்டது. ஆனால், அந்த உத்தரவு புறக்கணிக்கப்பட்டு விகாரை கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மிக அண்மையில் அந்த விகாரை குறித்த விவரங்கள் அடங்கிய கல்வெட்டு ஒன்றும் அந்த விகாரையில் வைக்கப்பட்டது.**

**இப்படி நீதிமன்ற உத்தரவை அப்பட்டமாக மீறி விகாரைக் கட்டுமானம் தொடர்ந்து இடம்பெறுவது தொடர்பில் நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. கிட்டத்தட்ட ஒன்றரை மாதங்களுக்குப் பின்னர் அது குறித்து நேரில் ஆராய்வதற்காக – அதாவது நீதிமன்றக் கட்டளை மீறப்பட்டமை தொடர்பில் ஆராய்வதற்காக – முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி குருந்தூர்மலைக்கு நேரில் சென்றிருந்தார். அப்போது அங்கு வந்திருந்த நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர, நீதிமன்ற விசாரணைக்குள் தலையிட்டு கருத்துக்கூற முற்பட்ட போது, நீதிமன்ற விசாரணையில் தலையிடவேண்டாம் என்று கூறி அவரை ஒதுங்கச் செய்தார் நீதிபதி.**

**அதனால் ஏற்பட்ட சீற்றத்தையே சரத் வீரசேகர நாடாளுமன்றத்தில் நேற்று வெளிப்படுத்தினார். ஆனால், அவர் தமிழ் நீதிபதிகள் சிலர் தொல்பொருள்களுக்கு எதிராகச் செயற்படுகின்றார்கள் என்றும், இந்த நாடு சிங்கள, பௌத்த நாடு என்பதைத் தமிழ் நீதிபதிகள் கவனத்தில்கொள்ளவேண்டும் என்றும் தனது உரையில் இனவாதத்தைக் கக்கியுள்ளார்.**

**நாடாளுமன்றத்திற்குள் ஆற்றப்படும் உரைகள் குறித்து நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது என்கிற சிறப்புச் சலுகையை அவர் இவ்வாறு முறைகேடாகப் பயன்படுத்தியுள்ளார். இதனையே அவர் நாடாளுமன்றத்திற்கு வெளியே பேசியிருந்தாரானால் நீதிமன்ற அவமதிப்புக் குற்றத்திற்கு ஆளாகியிருப்பார். நாடாளுமன்ற சிறப்புரிமையை முறைகேடாகப் பயன்படுத்தி அவர் நீதிமன்றத்தை அழுத்தத்துக்குள்ளாக்க முயன்றிருப்பது கடும் கண்டனத்துக்குரியது. இத்தகைய கருத்துக்கள் மிக மோசமான பக்க விளைவுகளை ஏற்படுத்தக்கூடியன.**

**தான் இனவாதம் கக்கியது மட்டுமல்லாமல், பௌத்த தொல்லியல் இடங்கள் தமிழர்களால் அழிக்கப்படுகின்ற என்கிற போலியான தோற்றப்பாட்டை ஏற்படுத்தி அதற்கெதிராக சிங்கள மக்களை ஒன்றிணையுமாறும் அறைகூவல் விடுத்து மேலும் மோசமான செயற்பாட்டில் இறங்கியுள்ளார் சரத் வீரசேகர. ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினரான அவரது இத்தகைய செயற்பாடுகளை அரசுத் தலைவர் மற்றும் தலைமை அமைச்சர் ஆகியோர் அனுமதிக்கக்கூடாது. இந்த உரைக்காக அவர்மீது நடவடிக்கை எடுப்பதுடன், இத்தகைய உரைகளை ஆளும் கட்சியின் மூத்த தலைவர்கள் நாடாளுமன்றத்தில் கண்டிக்கவும் வேண்டும். அதுவே இந்த நாடு அமைதியை இழந்துவிடாமல் இருப்பதை உறுதிப்படுத்தும்.**

# பொருளாதாரப் படுகொலையாளர்களால் நடுத்தர மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்

## அநுரகுமார சாட்டை



பொருளாதாரப்படுகொலையாளிகள் சுதந்திரமாக வாழும் போது நடுத்தர அப்பாவி மக்கள் பொருளாதாரப் பாதிப்புக்கு நட்டஈடு செலுத்துகிறார்கள். இலங்கையில் பிரதேசசபை உறுப்பினர் ஒருவர் கூட ஊழல் குற்றச்சாட்டுடன் சிறை செல்வதுமில்லை, தண்டனை அனுபவிப்பதுமில்லை.

சட்டத்துக்கு சிறு மீன்களான நடுத்தர மக்களே அகப்படுகிறார்கள், பெரிய மீன்களான அரசியல்வாதிகள் விடுபடுகிறார்கள். இந்நிலைமை மாற்றமடைந்தால் நாடு என்ற ரீதியில் முன்னேற்றமடையலாம் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற ஊழல் எதிர்ப்பு சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியவை வருமாறு -

பொருளாதாரப் படுகொலையாளர்களால் நாடு பாதிக்கப்பட்டுள்ளது. இதனை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை சுட்டிக்காட்டியுள்ளது. பொருளாதாரப் படுகொலையாளிகள் சுதந்திரமாகஇருக்கும்நிலையில்அப்பாவி மக்கள்பொருளாதாரப்பாதிப்புக்குநட்டஈடு செலுத்துகிறார்கள். அத்தியாவசியப் பொருள்விலையேற்றத்தால்நடுத்தரமக்கள் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஆனால் பொருளாதாரக் குற்றவாளிகள் சுகபோகமாக வாழ்கிறார்கள்.

நாட்டை வங்குரோத்து நிலைக்கு தள்ளிய பொருளாதாரப் படுகொலையாளிகளுக்கு சட்டத்தின் ஊடாக தண்டனை வழங்க வேண்டும் என மக்கள் குறிப்பிடுகிறார்கள். ஊழல் ஒழிப்புக்கு புதிய சட்டத்தை இயற்ற அவதானம் செலுத்தப்படுகிறது.

நடைமுறையில் உள்ள சட்டம் ஏன் பலவீனமடைந்தது என்பது குறித்து ஆராய வேண்டும். நடைமுறையில் உள்ள சட்டத்துக்கு சிறு மீன்களான அடிமட்டவர்களே அகப்படுகிறார்கள். பெரிய மீன்களான அரசியல்வாதிகள் மற்றும் அரசியல் ஆதரவு உள்ளவர்கள் தப்பித்துக்கொள்கிறார்கள். ஆகவே, நடைமுறையில் உள்ள சட்டம் பலவீனமானது என்று குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

600 மில்லியன் சொத்து சேர்ப்பு விவகாரத்துடன் தொடர்புடைய நாடாளுமன்ற உறுப்பினரை ஆணைக்குழுவுக்கு முன்னிலையாகுமாறு இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு அழைப்பு விடுத்த போது அரசியல் வரபிரசாதங்களைக் கொண்டு அவர் தப்பித்து விட்டார். பிணைமுறி மோசடியாளர் என்று குறிப்பிட்ட ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி, அவரை மோசடியாளர் என்று குறிப்பிட்டவர்கள் தற்போது அமைச்சர். புதிய ஊழல் எதிர்ப்பு சட்டமூலத்தின் ஊடாக மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜூன மகேந்திரனை அழைத்து வர முடியுமா? முடியாது.

இலஞ்ச ஊழல் மோசடியுடன் தொடர்புடைய பலர் நாடாளுமன்றத்தில் உள்ளார்கள். அண்மையில் கூட தங்கம் கடத்தல் விவகாரத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டு மறுநாள் நாடாளுமன்றத்துக்கு வருகை தந்து அரசாங்கத்துக்கு எதிராக வாக்களிக்கிறார். இவ்வாறான தன்மையே காணப்படுகிறது. ஆகவே, இயற்றப்பட்ட சட்டத்தில் எந்த குறைப்பாடுகளும், பலவீனமும் கிடையாது. அரசியல் காரணிகளுக்காகவே சட்டங்கள் புறக்கணிக்கப்படுகின்றன.

மல்வானை சொகுசு வீடு உட்பட பல முறைகேடான சொத்துக்கள் தொடர்பான வழக்குகள் அரசியல் அழுத்தத்துடன் இரத்து செய்யப்பட்டது. சட்டமா அதிபர் திணைக்களத்தில் அரசியல் அழுத்தம் செல்வாக்கு செலுத்துகிறது, ஆகவே இயற்றப்பட்ட சட்டங்களை தவறு என்று குறிப்பிடுவது முறையற்றது. மோசடியான அரசியல் கலாசாரம் உயர் சட்டங்களையும் மலினப்படுத்துகிறது.

பாகிஸ்தான், பங்களாதேஸ், இந்தியா ஆகிய நாடுகளில் பிரதமர் மற்றும் அரசியல்வாதிகள் ஊழல் மோசடி குற்றத்தால் சிறை சென்றுள்ளார்கள், செல்கிறார்கள். ஆனால் இலங்கையில் பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் கூட சிறை செல்வதும் இல்லை, தண்டனை அனுபவிப்பதும் இல்லை.

பொருளாதாரப் படுகொலையாளிகளால் நடுத்தர மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இயற்கை அழிவால் பொருளாதாரம் பாதிக்கப்பட்டிருந்தால் நாங்கள் முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம்.

ஆனால், தற்போதைய பொருளாதாரப் பாதிப்பு ஊழல்வாதிகளால் உருவாக்கப்பட்டது. ஊழல்வாதி பிறிதொரு ஊழல்வாதியை காட்டிக் கொடுப்பது இல்லை.

ஆகவே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை முன்னிலைப்படுத்திக்கொண்டு ஊழல் ஒழிப்பு தொடர்பில் அவதானம் செலுத்த முடியாது.

நடைமுறைக்கு சாத்தியமான வகையில் சட்டமியற்ற ஒத்துழைப்பு வழங்குவோம். -என்றார். (05)

# நாடு வங்குரோத்தடைந்தமை தொடர்பாகத் தேடிப் பார்க்கின்ற தெரிவுக்குழு தலைவராக எதிர்க்கட்சி உறுப்பினரை நியமிக்குக

## கிரியெல்ல கூறுகிறார்



நாடு வங்குரோத்து அடைந்தமைக்கான காரணத்தை உண்மையாக அறிந்துகொள்ள தேவை இருப்பதாக இருந்தால் எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவரையே அதன் தலைவராக நியமிக்க வேண்டும்.

ஆளும் கட்சி ஒருவரை தலைவராக நியமித்திருக்கின்றமை திருடனின் தாயிடம் சாஸ்திரம் கேட்பது போலாகும். அதனை ஏற்றுகொள்ள முடியாது என எதிர்க்கட்சி பிரதமகொறடா லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் ஒழுங்கு பிரச்சினை ஒன்றை முன்வைத்து குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் -

நாட்டின் நிதி வங்குரோத்துக்கான காரணங்களைக் கண்டறிந்து நாடளுமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்க நியமிக்கப்பட்ட தெரிவுக்குழு அமைக்க வேண்டும் என பிரேரணை கொண்டுவந்தது எதிர்க்கட்சியாகும்.

அதனால் நாடு வங்குரோத்து அடைந்தமை தொடர்பாக தேடிப்பார்க்கும் தெரிவுக்குழுவின் தலைவராக ஆளும் கட்சி உறுப்பினர் சாகல காரியவசம் பெயரிட்டிருக்கிறார். இது திருடனின் தாயிடம் சாஸ்திரம் கேட்பதுபோலாகும்.

நாடு வங்குரோத்து அடைந்தமைக்கான காரணத்தை உண்மையாக அறிந்துகொள்ள தேவை இருப்பதாக இருந்தால் எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவரை அதன் தலைவராக நியமிக்க வேண்டும், அதனால்தான் நிதிக்குழுவின் தலைவர் பதவி எதிர்க்கட்சிக்கு வழங்கப்பட வேண்டும் என நிலையியற் கட்டளையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடு வங்குரோத்து அடையும் வரைக்கும் எமக்குத் தெரியாது. அப்போது அரச தரப்பு உறுப்பினர் ஒருவரே நிதிக்குழுவின் தலைவராக இருந்தார்.

அதனால் நாடு வங்குரோத்து அடைந்தமை குறித்து தேடிப்பார்க்கும் தெரிவுக்குழுவின் தலைவராக எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவரை நியமிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். நியமிக்கப்பட வேண்டிய உறுப்பினரின் பெயரையும் நாங்கள் தெரிவித்திருக்கிறோம். எதிர்க் கட்சியில் யாரை வேண்டுமானாலும் நியமிக்கலாம். - என்றார். (05)

# தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு சுன்னாகம் பிரான்ஸ் ஒன்றியத்தால் உதவி

*தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை சத்திரசிகிச்சைக் கூட்டத்துக்கு சுன்னாகம் மக்கள் மன்றம் பிரான்ஸ் ஐக்கிய இராட்சியம் மில்லரன் கீன்ஸ் மகளிர் அணியினரால் சலவை இயந்திரம் ஒன்றும் சத்திரசிகிச்சைக் கூடக் கருவிகளை வைப்பதற்குரிய உபகரணம் ஒன்றும் ஒரு தொகுதி மருந்துப் பொருள்களுக்குரிய நிதியும் கடந்த வியாழக்கிழமை அன்பளிப்புச் செய்யப்பட்டன.*




*தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் ஊடாக வழங்கப்பட்ட இந்த உபகரணங்களை தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் நோயாளர் நலன்புரிச் சங்கப் பொதுச்சபை உறுப்பினரும், சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபரும், சுன்னாகம் மக்கள் மன்றம் பிரான்ஸ் கிளைத் தலைவருமான லயன் மு.செல்வஸ்தான் வைத்தியசாலை நிர்வாகத்திடம் வழங்கி வைத்தார்.*

*இந்த நிகழ்வில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் றெமான்ஸ், சத்திரசிகிச்சை நிபுணர் வைத்தியகலாநிதி வாகீசன், நோயாளர் நலன்புரிச் சங்க செயலாளர் லயன் சி.ஹரிகரன், உப செயலாளர் சோ.செல்வரத்தினம், நிர்வாக உத்தியோகத்தர் ரமேஸ் மற்றும் சத்திரசிகிச்சைக்கூட வைத்தியர்கள், தாதியர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (05)*


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road, Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swahpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர்
Kalaikkathir

# கொக்குத் தொடுவாய் மனிதப் புதைகுழிகள் அகழ்வு எதேச்சதிகாரமாக இடம்பெறுகிறது

## சுமந்திரன் காட்டம்



முல்லைத்தீவு - கொக்குத் தொடுவாய் மனிதப்புதைகுழியின் அகழ்வுப் பணிகள் எதேச்சதிகார மாக இடம்பெறுகின்றனஎனத்தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளு மன்ற உறுப்பினரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமானஎம்.ஏ.சுமந்திரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

சர்வதேச நிபுணத்துவத்தின் அடிப்படையில் கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின் அகழ்வுப் பணிகள் இடம்பெறவேண்டும் என வும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

முல்லைத்தீவு - கொக்குத்தொடு வாய் மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகளைப் பார்வையிட்டு அதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ் வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

இந்த அகழ்வுப் பணிகள் ஒரு குறித்த முறைப்படி செய்வதாகத் தெரியவில்லை.

சர்வதேச ரீதியிலே இந்த அகழ்வுப் பணிகள் எப்படியாகச் செய்யப்படவேண்டும் என்பதற்குப் பலநியதிகள் உள்ளன. அந்த நியதிகள் எவையும் இங்கு பின்பற்றப்படுகின் றன எனத் தெரியவில்லை. இந்த அகழ்வுப்பணிகள் எதேச்சதிகார மாகச் செய்யப்படுகின்றன.

வைத்தியர் இங்கே இருந்தா லும்கூட, சாதாரணமாக ஒரு புதை குழியிலே ஒரு மனித உடலைத் தோண்டி எடுத்து செய்யப்படுகின்ற பரிசோதனைக்கும், இப்படியாகப் பல உடல்கள் மனிதப் புதைகுழியாக இருக்கின்ற பகுதி தோண்டப்பட்டு எடுப்பதற்கும் நிறைய வித்தியாசங் கள் உண்டு.

இதைச்செய்வதற்கான சர்வதேச நியதிகள் ஏராளமாக இருக்கின்றன.

அந்த நியதிகளைப் பின்பற்றியே இந்த அகழ்வுப்பணியை மே றகொள்ள வேண்டும். ஆனால் இங்கே அப்படி யாக அகழ்வுப் பணிகள் இடம்பெறுவதாகத்தெரிய வில்லை.

கடந்த 05.07.2023 அன்று மன்னார் நீதி மன்றிலும், மன்னாரில் இனங்காணப்பட்ட புதைகுழி தொடர்பிலான வழக்கு மீளவும் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த எல்லா விடயங்களிலேயும் திருப் திகரமான முறையிலே இந்த அகழ்வுகள் இடம்பெறுகின்றன எனத் தெரியவில்லை.

இது இந்த நாட்டிலே பல ஆயிரக் கணக்கான மக்கள் காணாமல் ஆக்கப்பட்ட ஒரு சூழ் நிலையிலே, இவ்வாறான சாட்சியங்கள் கிடைக்கிற போது, அவை மிகவும் கவன மாக சர்வதேச நிபுணத்துவத்தின் அடிப்படையிலே விசாரிக்கப்பட்டு, அகழ்வுகள் செய்யப்படவேண்டும்.

ஆனால், இப்படியாக எதேச்சதி காரமாகச் செய்வதும், அகழ்வுப்பணி கள் இடம்பெறுகின்ற இடங்களில் அகழ்வுப்பணிகளில் ஈடுபடுபவர்கள், வைத்திய அதிகாரிகள் உள்ளிட்ட வர்கள் இடமாற்றம் செய்-யப்படுகின்றனர். சிலவேளைகளில் நீதிவான்கள்கூட இடமாற்றம் செய்-யப்படுகின்றார்கள்.

ஆகையாலேயே இதிலேயிருந்து உண்மையைக் கண்டறிவதற்கு அரசிற்கு முழுமையான மனதில்லா மல்இருப்பதும், இன்னொருபடிமேலே சொன்னால் இவற்றை எல்லாம் மூடி மறைப்பதும்தான் அரசுடைய நோக்கமாக இருப்பது புலனாகிறது.

குறிப்பாக இந்த இடத்திலி ருந்து எடுக்கப்படுகின்ற சான்றுப் பொருள்கள்கூட கவனமாகப் பேணிப் பாதுகாக்கப்படவில்லை. அதனை இங்கே நேரடியாக எம்மால் அவதானிக்கக்கூடியதாக விருந்தது.

எடுக்கப்பட்ட சான்றுப்பொருள்கள் பாதுகாப்பின்றி, பெட்டிகளில் வைக்கப்பட்டுள்ளன. அவற்றைஎவரும் எடுத்துக்கொண்டு போகக்கூடிய வகையிலேயே குறித்த சான்றுப் பொருள்கள் சேகரிக் கப்பட்டு வைக்கப்பட்டிருப்பதை அவதானிக் கக்கூடியதாகவிருந்தது.

அதேவேளை, இந்த இடத்தை எவ்வாறாகப் பாதுகாப்பாக வைத்தி ருக்கப்போகின்றார்கள் என்பதிலும் கேள்விகள் இருக்கின்றன.

இந்த அகழ்வுப்பணிகளை இடைநிறுத்தி இன்னொரு நாளில் அகழ்வுப்பணிகளைச் செய்வதாக விருந்தால் என்னவிதமாக இந்த இடத்தைப் பாதுகாப்பாக வைத்தி ருக்கப்போகின்றார்கள்.

பொலிஸாரின் கைகளில் இந்த இடத்தை விடப்போகின்றார்களா, இது வேலியே பயிரை மேய்கின்ற கதையாக அமைந்துவிடக்கூடாது.

புலனாய்வாளர்கள் ஏராள மாக இங்கே நிறுத்திவைக்கப்பட் டிருக்கின்றனர். பலபுலனாய்வாளர்கள் இங்கேபுகைப்படங்கள் எடுப்பதையும் அவதானிக்கக்கூடியதாகவுள்ளது.

ஆகவேபுவனாய்வாளர்கள்இங்கு வந்து, இங்கேயிருந்து யார் என்ன செய்கின்றார்கள் என்ற தகவல்களை கிரமமாக அனுப்பிக்கொண்டிருக்க, இந்த விடயங்களை மறைக்க நினைக்கிறவர்கள் அடுத்த நடவடிக் கைக்கு தயாராவார்கள்.

ஆகையாலே இது சரியான விதத்திலே பாதுகாக்கப்படவேண்டும். சரியான முறையிலே, சர்வதேச நிபுணத்துவத்தின் அடிப்படையிலே இந்த அகழ்வுப்பணிகள் இடம் பெறவேண்டும்.

அதற்கான சர்வதேச நிபுணத்து-வம், மேற்பார்வை உடனடியாகக் கொண்டுவரப்படவேண்டும் - என் றார். (05)

# மலையகத்தின் எதிர்கால மூலதனமான கல்வித்துறையில் ஊழலை திணிக்காதீர்

## வேலுகுமார் தெரிவிப்பு

மத்திய மாகாணத் தின் கல்வி நிலை பதவிக ளில் காணப்படும் முரண் பாடுகளுக்கு அரசாங்கம் சிறந்த தீர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

மலையக இளைஞர்க ளின் எதிர்கால மூலதனம் கல்வி ஆகவே அதிலும் ஊழலைத் திணிக்காதீர்கள் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் சபையில் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற ஊழல் எதிர்ப்பு சட்டமூலம் மீதான விவாதத்தில் உரை யாற்றுகையில் மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர்மேலும்உரையாற் றியவை வருமாறு -

காலத்துக்குத் தேவை-யான வகையில் ஊழல் எதிர்ப்பு சட்டமூலம் சபைக்கு முன்வைக்கப்பட்டுள்ளது. தற்போதைய நாட்டின் பொருளாதார நிலை வங்குரோத்து நிலைக்கு தள்ளப்பட்டது.

அத்தியாவசியப்பொருள் களை பெற்றுக்கொள்ள மக் கள் நீண்ட வரிசையில் காத்திருந்தார்கள். ஊழல் மோசடிஇதன்பின்னணியாக காணப்பட்டது.

நாட்டின் சகல துறைக ளிலும் ஊழல் மோசடி காணப்படுகிறது. பிறப்பு முதல் இறப்பு வரை சகல நடவடிக்கைகளிலும் இலஞ்ச ஊழல் காணப்படுகிறது.

இலவச கல்வி மற்றும் மருத்துவதுறையிலும்ஊழல் வேறூன்றியுள்ளது. ஊழல் இல்லாதொழிக்க வேண்டும் என சர்வதேச நாணய நிதி யம் வலியுறுத்தியுள்ளது.

அதேபோல் ஊழல்வாதி கள் தண்டிக்கப்பட வேண் டும் என சர்வதேச நிறு வனங்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன. இயற்றப்படும் சட்டம் சிறந்த முறையில் நடைமுறைப் படுத்தப்பட வேண்டும்.

மத்திய மாகாணத்தில் கல்வி நிலை கடந்த காலங்களில் அரசியல் மயப்படுத்தப்பட்டிருந்தது. அரசியல் கட்சிகளின் அழுத்தம் ஊடாக கல்வி நிலை கட்டுப்பட்டிருந்தது.

மத்திய மாகாணத்தில் அதிகதோட்டப்பாடசாலைகள் காணப்படுகின்றன. தோட்ட பாடசாலைகளின் நலன் தொடர்பில் ஆராய மத் திய மாகாணத்தில் மேல திக கல்வி பணிப்பாளர் பதவி ஒன்று காணப்பட்டது. ஆனால்தற்போது அந்தபதவி நீக்கப்பட்டுள்ளது.

மத்திய மாகாணத்தில் மேலதிக கல்வி பணிப் பாளர்களாக பதவி வகித் தவர்கள் அரசியல் கட்சிக ளின் கையாள்களாக செயற் பட்டுள்ளார்கள்.

இதன் காரணமாகவே தற்போது அந்த பதவி முழு மையாக நீக்கப்பட்டுள்ளது. அரச நிர்வாக கட்டமைப்பில் மாகாண சபை ஒன்று இல்லாத நிலையில் எவ்வாறு மாகாண மேலதிக கல்வி பணிப்பாளர் என்ற பதவி நிலையை நீக்க முடியும். இதில் உள்ள அரசியல் என்ன, இனவாதம் என்ன என்று கேள்விஎழுப்பவேண் டியுள்ளது.

நுவரெலியா மாவட்டத் தில் உள்ள ஹற்றன் கல்வி வலயத்தில் உள்ள 133 பாடசாலைகளில் 115 பாடசாலைகள் தமிழ்மொழி மூலமானவை, நுவரெலியா கல்வி வலயத்தில் உள்ள 158 பாடசாலைகளில் 123 பாடசாலைகள் தமிழ் மொழி மூலமானவை.

ஹற்றன் கல்வி வலயத் துக்குரிய பணிப்பாளர் தொடர்ச்சியாக மலையக சமூகத்தில் இருந்து உரிய கல்வி தகைமையுடன் நியமிக்கப்பட்டிருந்தார். ஆனால் தற்போது அங்கு உள்ள அரசியல்வாதிகளின் தலையீட்டினால் ஊழல் உள்ளவர்கள் நியமிக்கப்பட்டு இன்று நீதிமன்ற தடையுத் தரவு பிறப்பிக்கும் நிலை தோற்றம் பெற்றுள்ளது.

நுவரெலியா கல்வி வலயத்தில் தமிழர் ஒருவர் பணிப்பாளராக நிய மிக் கப்படுவது தொடர்ந்து தடைப்பட்டு வருகிறது. அதற்கு ஆளும் தரப்பில் உள்ள அரசியல் கட்சியின் செயற்பாடு பிரதானவையாக காணப்படுகிறது. இதனை மாகாண சபைக்கு உரிய விவகாரம் தொடர்பில் கல்வி இராஜாங்க அமைச்சர் புறக்கணிக்க கூடாது. மத்தி ய மாகாண மேலதிக கல்வி பணிப்பாளர் விவகாரம் மற் றும் நுவரெலியா கல்வி வலய பணிப்பாளர் நியமனம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தி சிறந்த தீர்வை பெற்றுக்கொடுக் வேண்டும். மலையக இளைஞர்களின் எதிர்கால மூலதனம் கல்வி ஆகவேகல்வியிலும்ஊழலை திணிக்காதீர்கள். - என்றார். (05)

# சர்ச்சைக்குரிய மல்வானை வீடு, காணி நீதி அமைச்சுக்குச் சொந்தமானதாகும்

## நீதியமைச்சர் விஜயதாஸ தெரிவிப்பு



சர்ச்சைக்குரிய மல் வானை வீடு மற்றும் காணி நீதியமைச்சுக்கு சொந்தமானது.. இந்த வீட்டை அரசுடைமையாக் கும் பணிகள் தாமதமான நிலையில் உள்ளன.

இருப்பினும் வெகு விரைவில் அரசுடைமை யாக்கப்படும் என நீதி, சிறைச்சாலைகள் அலுவல் கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச் சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற ஊழல் எதிர்ப்பு சட்டமூலம் மீதான விவாதத்தின் போது உரை யாற்றிய மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க முன்வைத்தகேள்விகளுக்கு பதிலளிக்கையில் மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர்மேலும்உரையாற் றியவை வருமாறு -

ஊழல் மோசடியுடன் தொடர்புடையவர்களில் பலர் நாடாளுமன்றத்தில் உள்ளார்கள் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸா நாயக்க குறிப்பிட்டார்.

ஆனால் அது யார், யார் என்று குறிப்பிடவில்லை. நான் 18 வருடங்களாக அமைச்சு பதவி வகித் துள்ளேன். அமைச்சராக வும், நாடாளுமன்ற உறுப் பினராகவும் பதவி வகித்துக் கொண்டு பெற்ற நிதியை கொண்டு வாழவில்லை.

அமைச்சு,நாடாளுமன்ற உறுப்பினர் பதவி ஊடாகக் கிடைக்கும் வருமானத்தை புற்றுநோய் சிகிச்சை வைத்தி யசாலை, லேடி ரிஜ்வே சிறு வர் வைத்தியசாலை, உட்பட நலன்புரி அமைப்புக்களுக்கு வழங்குகிறேன்.

கடந்த 38 வருட காலமாக வருமான வரி செலுத்துகிறேன். தற் போதைய வரி அதிகரிப்பால் பாதிக்கப்பட்டுள்ளேன். அதற் காக வரி செலுத்தாமல் இருக்கவில்லை. அரச நிதியை மோசடி செய்-யவுமில்லை. சர்ச்சைக்குரிய மல்வானை காணி மற் றும் இல்லம் தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டது. இந்த விவகாரம் தொடர் பில் சாட்சியமாகிய இரு தரப்பினரும் மல்வானை வீடு மற்றும் அதனுடனான காணிதமக்கு சொந்தமானது அல்ல என நீதிமன்றத்தில் குறிப்பிட்டார்கள்.

ஆகவே, அந்த இல்லம் மற்றும் காணியை நீதிய மைச்சுக்கு பொறுப்பாக்கு மாறு நான் அமைச்சரவை பத்திரம் சமர்ப்பித்தேன் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. மல்வானை வீட்டை அரசுடமையாக்கும் பணிகள் தாமத நிலையில் உள்ளன. இருப்பினும் நிச்சயம் அரசுடைமையாக் கப்படும்.

அரசியல் அழுத்தங்க ளுக்கு அமைய வழக்கு களை சட்டமா அதிபர் மீளப்பெற்றுள்ளதாக முன்வைக்கப்பட்டுள்ள குற் றச்சாட்டை ஏற்றுக்கொள்ள முடியாது.

தற்போதைய சட்டமா அதிபர் பதவியேற்றதன் பின்னர் ஒரு வழக்கை மாத்திரம் மீளப்பெற்றுள்ளார். போதிய சாட்சியம் இல் லாத காரணத்தால் மேல் நீதிமன்ற நீதிபதியின் அனுமதியுடனே அந்த ஒரு வழக்கு மீளப்பெற்றுக்கொள் ளப்பட்டது.

ஊழல், இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு ஓய்வுபெறும் சாலை என்பதை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள் ஆணைக்குழுவின் செயற் பாடு, உறுப்பினர் நியமனம் தொடர்பில் முரண்பாடான தன்மை காணப்படுகிறது. அதற்காகவே புதிதாக சட்ட மியற்ற தீர்மானிக்கப்பட்டுள் ளது. - என்றார். (05)

# சாரத்தைக் கொண்டு முகத்தை மறைக்கும் நிலைமை ஏற்படும்

## ஜகத் குமார சாட்டை




வறிய மக்களுக்கு ஏற்பட்டுள்ள அநீ திக்கு நீதி கிடைக்க வேண்டும். தகுதியுடைய-வர்கள் நீக்கப்பட்டு தகுதியற்றவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். இதனைக் கூறும் போதுநாமேமக்களைத்தவறாகவழிநடத்து-வதாகக் கூறுகிறார்கள்.

அரசாங்கத்துக்குள் சிலர் தாமே பெரிய-வர். தமக்கே எல்லாம் தெரியும். தாமே சிறப்பாக செய்வதாக நினைக்கின்றனர். சிறப்பாக செய்வதாக நினைத்து வெளியில் இறங்கினால் சாரத்தைக்கொண்டு முகத்தை மறைக்கும்நிலையே ஏற்படும் என பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவிய லாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரி வித்தார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

நான் இது தொடர்பில் கதைத்தன் பின்னர் நிதி இராஜாங்க அமைச்சர் எனது தோலில் ஏற முயன்றார். நாங்களே அவர்களை வழிநடத்து-வதாகக் கூறினார். நாம் வழிநடத்துவதாக இருந்திருந்தால் ஏற்கனவே முழுநாடும் தீப்பற்றி இருக்கும். அப்படி செய்வதற்கான இயலுமையும் உள்ளது.

இந்தப் பிரச்சினையை அரசியல் பிரச் சினையாகவோ அல்லது நாட்டுக்கு தீ வைப் பதற்கோ எனக்குத் தேவையில்லை. அப்பாவி வறிய மகக்ளுக்கு ஏற்பட்டுள்ள அநீதிக்கு நீதி கிடைக்க வேண்டும். அதனைப் பெற்றுக் கொடுக்க வேண்டிய தேவை எனக்குள்ளது.

அரசாங்கத்துக்கும், அமைச்சருக்கும் ஒருவாக்குகளே உள்ளது. எனக்கும் ஒருவாக்கு களே உள்ளது. சிலர் தாமே பெரியவர். தமக்கே எல்லாம் தெரியும். தாமே சிறப்பாக செய்வதாக நினைக்கின்றனர். சிறப்பாக செய்வதாக நினைத்து வெளியில் இறங்கினால் சாரத்தைக்கொண்டு முகத்தை மறைப்பது போன்று தவறான ஒன்றையே காண வேண்டி ஏற்படும். தமக்கு வழங்கப்படும் நிவாரணங்களை இல்லாமல் செய்வதற்காக நாட்டு மக்கள் இந்த அரசாங்கத்துக்கு வாக்களிக்கவில்லை. வருமானமுள்ளவர்களுக்கு நலன்புரிகளை வழங்குமாறு ஒருபோதும் நாம் கூறவில்லை. தகுதியுடையவர்கள் நீக்கப்பட்டு தகுதி யற்றவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். இதனைக் கூறும் போது நாமே மக்களை தவறாக வழிநடத்துவதாகக் கூறுகிறார்கள்.

மேலும் நான் மொட்டுக்கட்சிக்கு ஏற்றவர் அல்லர் எனக் கருதலாம். என்னை சகித்துக் கொள்ள முடியாமல் இருக்கலாம். எமது பெறுமதி கட்சிக்கு தெரியாவிட்டால் அதனை நான் பொருட்படுத்தவில்லை. எம்மால் முடியு மானவரை செயற்படுவோம். நான் கட்சியிலிருந்தும் விலகவில்லை. அரசாங்கத்தி லிருந்தும் விலகவில்லை. அரசாங்கத்துக்குள் இருந்துகொண்டு அனைத்துக்கும் கைகளை உயர்த்தும் மின்கம்பங்களை போன்று செயற்பட முடியாது. - என்றார். (05)

# சீமெந்து விலையை குறைக்க தீர்மானம் என்கிறார் நளின்



சீமெந்து விலையை குறைக்கதீர்மானித்துள்ளதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித் துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரை யாற்றிய அமைச்சர், அதற் கமைய சீமெந்து மூடை ஒன்றின் விலை 300 ரூபாவால் குறைக்கப்படும் என்றார்.

மேலும் கட்டுமா னத்துறைக்குப் பயன்படுத் தப்படும் சில பொருள்களின் விலைகள் குறிப்பிட்டளவுக்கு குறைந்துள்ளதாக வர்த்தகர்கள் மற்றும் விநியோகஸ்தர்கள் தெரிவிக் கின்றனர். அதன்படி சீமெந்து மூடையின் விலை 2600 ரூபாவிலிருந்து 300 ரூபா குறைக்கப்பட்டு 2300 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படவுள்ளமை குறிப் பிடத்தக்கது. (05)

# வெரிட்டே ரிசேர்ச் அமைப்பின் கருத்து தொடர்பில் மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் கடும் விமர்சனம்

உள்ளகக் கடன்மறுசீரமைப்பு செயற்திட்டத்தின் விளைவாக ஊழியர் சேமலாப நிதியத்தில் ஏற்படக்கூடிய தாக்கம் தொடர்பாக அண்மையில் வெரிட்டே ரிசேர்ச் அமைப்பின் நிறைவேற்றுப்பணிப்பாளரால் வெளியிடப் பட்ட கருத்துக்கள் உண்மைக்குப் புறம்பானவை என்றும், எவ்வித அடிப்படைகளும் அற்றவை என்றும் மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

உள்ளகக் கடன்மறுசீரமைப்பு செயற்திட்டம் கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. இவ்வாறானதொரு பின்னணியில் தமது அமைப்பால் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீடுகளின்படி, உள்ளகக் கடன்மறுசீரமைப்பை விடுத்து 30 சதவீத வருமான வரி செலுத்துகையைத் தெரிவுசெய்வதே ஊழியர் சேமலாப நிதியம் போன்ற நிதியங்களுக்கும் அதன் அங்கத்தவர்களுக்கும் பெரிதும் நன்மையளிக்கும் என்று பிரபல பொருளியல் ஆய்வு அமைப்பான வெரிட்டே ரிசேர்ச்சின் நிறைவேற்றுப்பணிப்பாளர் நிஷான் டி மெல் ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் குறிப்பிட்டிருந்தார். அதுமாத்திரமன்றி தற்போது முன் மொழியப்பட்டுள்ள கடன்மறுசீரமைப்பு செயற்திட்டத்தின் பிரகாரம், பிணையங்களுக்கான கொடுப்பனவாக ஊழியர் சேமலாப நிதியத்துக்கு வழங்கப்படும் நிதியில் பெருமளவு கழிப்பனவுகள் இடம்பெறும் என்றும், அது எதிர்வரும் 2038 ஆம் ஆண்டு வரையான 16 வருடகாலத்தில் ஊழியர் சேமலாப நிதியத்துக்கு 12 ட்ரில்லியன் ரூபா நட்டத்தை ஏற்படுத்தும் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்திருந்தார்.

இந்நிலையில் மத்திய வங்கியின் கேட்போர்கூடத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பின் போது, ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்கவிடம் இது பற்றிக் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்குப் பதிலளித்த ஆளுநர் –

மேற்குறிப்பிட்டவாறான கருத்து முற்றிலும் தவறா னது என்றும், அக்கருத்துக்கு அடிப்படையாக அமைந்த ஆய்வு சரியான தரவுகளின் அடிப்படையில், உண்மை யான பெறுபேறை வெளிப்படுத்தும் வகையில் மேற் கொள்ளப்பட்ட ஆய்வு அல்ல என்றும் தெரிவித்தார்.

இந்த ஆய்வு விடயம் தொடர்பில் தெளிவற்றவர்களால் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது அல்லது மக்களைத் தவறாக வழிநடத்தும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது என்று குற்றஞ்சாட்டிய அவர், 2038 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பதிவாகக்கூடிய பணவீக்கம் எவ்வாறு கணிப்பிடப்பட்டது என்றும் கேள்வி எழுப்பினார்.

மேலும் தம்மால் முன்மொழியப்பட்டுள்ள உள்ளகக் கடன்மறுசீரமைப்பு செயற்திட்டத்தின் பிரகாரம் ஊழியர் சேமலாப நிதியத்துக்கு வழங்கப்படக்கூடிய பிணையங்களுக்கான வட்டிவீதம் நிர்ணயிக்கப்படுவதால், அதில் குறிப்பிட்டவொரு தாக்கம் ஏற்படும் என்பதை தாம் ஏற்கனவே சுட்டிக்காட்டியதாகக் குறிப்பிட்ட அவர், எந்தவொருதாக்கமும் ஏற்படக்கூடாது என்றால் எதனையும் செய்யாமல்தான் இருக்கவேண்டும். – என்றார். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# இராணுவ முகாம்களிலுள்ள பெரும் விகாரைகளின் கீழ்ப் பகுதிகள் மனித புதைகுழிகளாக இருக்கலாம்

## சந்தேகிக்கிறார் ரவிகரன்



முல்லைத்தீவு மாவட்டத்தில், சில இராணுவ முகாம்களில் அமைக் கப்பட்டுள்ள, பாரிய விகாரைகளின் கீழ்பகுதிகள் மனிதப்புதைகுழிகளாக இருக்கலாமென முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

குறிப்பாக வட்டுவாகல் மற்றும் கேப்பாப்புலவு உள்ளிட்ட இராணுவமுகாம்களில் பாரிய அளவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள விகாரைகளைச் சுட்டிக்காட்டிய ரவிகரன், இராணுவ முகம்களில் அவ்வாறு பாரிய அளவில் விகாரைகள் நிர்மாணிக்கப்படவேண்டிய அவசியம் என்ன? எனவும் கேள்வி எழுப்பியுள்ளார்.

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வுப்பணிகள் தொடர்பில் பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

கொக்குத்தொடுவாய் பகுதி நீண்டகாலமாக ஒரு சூனியப் பிரதேசமாக இருந்த ஒரு பகுதியாகும். கடந்த 1984 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் இங்கிருந்த தமிழ் மக்கள் அனைவரையும் இராணுவம் வெளியேற்றியது. அப்போதிருந்து நீண்டகாலமாகக் கொக்குத்தொடுவாய் இராணுவத்தின் கட்டுப்பாட்டிலிருந்த ஒரு சூனியப் பகுதியாக காணப்பட்டது.

கடந்த 2009 ஆம் ஆண்டு காலப்பகுதியில் யுத்தம் மௌனிக்கப்பட்டபோது சரணடைந்தவர்கள் பஸ்களில் ஏற்றப்பட்டு சில இடங்களுக்கு கொண்டுசெல்லப்பட்டனர் என நாம் அறிகின்றோம்.

அவ்வாறு சரணடைந்தவர்கள் கூட இராணுவத்தினரால் படுகொலைசெய்யப்பட்டு, பின்னர் இராணுவ சூனியப் பிரதேசமான இங்கே கொண்டுவந்து புதைக்கப்பட்டிருக்கக்கூடிய வாய்ப்புக்கள்கூட இருக்கின்றன.

தற்போது இங்கே அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளும்போது பல மனித எச்சங்கள் தொடர்ந்தும் தென்படுவதை அவதானிக்க முடிகின்றது.

மேலும் இங்கு அகழ்வுப்பணிகள் முறையாக இடம்பெறுவதாக எமக்குத் தெரியவில்லை. இங்கு அகழ்ந்து எடுக்கப்பட்ட மனித எச்சங்கள் பாதுகாப்பின்றி பெட்டிகளில் வைக்கப்பட்டிருப்பதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

எனவே சரியானவிதத்தில் இந்த அகழ்வுப்பணிகளுடைய முடிவுகள் இருக்குமா என்பதிலும் எமக்கு சந்தேகமிருக்கின்றது.

சர்வதேச நிபுணத்துவம் வாய்ந்தவர்கள் இந்த அகழ்வுப் பணிகளில் ஈடுபடவேண்டும் என்பதுடன், சர்வதேசநிபுணத்துவத்தின் அடிப்படையில், சர்வதேச நியதிகளைப்பின்பற்றி இந்த அகழ்வுப் பணிகள் இடம்பெறவேண்டும் என்பது எமது கோரிக்கையாகவிருக்கின்றது.

இறுதிக்கட்டப்போரின்போது சரணடைந்த தமிழீழவிடுதலைப் புலிப்போராளிகளுக்கு மன்னிப்பு வழங்காது, சரணடைந்தவர்கள் படுகொலைசெய்யப்பட்டு, இங்கு புதைக்கப்பட்டிருப்பதாகவே மக்கள் சந்தேகிக்கின்றனர்.

இதனைவிட இங்குள்ள முக்கியமான இராணுவ முகாம்களில், குறிப்பாக வட்டுவாகல், கேப்பாப்புலவு போன்ற இடங்களில் பாரிய புத்த விகாரைகள் நிறுவப்பட்டுள்ளன.

ஆனால் அவ்வாறு பாரிய அளவில் இராணுவமுகாம்களில் விகாரைகள் அமைக்கவேண்டிய தேவையில்லை.

பல இராணுவ முகாங்களில் சிறிய அளவிலான விகாரைகள் அமைக்கப்பட்டிருக்கும்போது கேப்பாப்புலவு, வட்டுவாகல் உள்ளிட்ட சில இராணுவமுகாம்களில் இவ்வாறு பாரிய அளவிலான விகாரைகள் நிறுவப்பட்டுள்ளதன் சூட்சுமம் என்ன?

இவ்வாறான இராணுவ முகாம்களில் அமைந்துள்ள விகாரைகளின் கீழ்பகுதிகளில், இறுதிக் கட்டப் போரில் சரணடைந்தவர்கள் படுகொலைசெய்யப்பட்டு, அவர்களின் சடலங்கள் புதைக்கப்புட்டுள்ளதா என்ற சந்தேகங்களும் எழுகின்றன.

எனவே, இவ்வாறான இராணுவ முகாம்கள், இராணுவமுகாம்களிலுள்ள பாரிய விகாரைகளையும் சர்வதேச நிபுணத்துவத்தின் அடிப்படையில் அகழ்ந்து ஆராய்வதற்குரிய சந்தர்ப்பங்களும் ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும்.

ஏன் எனில் யுத்தம் மௌனிக்கப்பட்டு சுமார் 14 ஆண்டுகளுக்கு மேலாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், தமது காணாமல் ஆக்கப்பட் உறவுகளைத் தேடித் தொடர்ந்து போராடிவருகின்றனர். ஆனால் தொடர்ந்து மாறிவரும் அரசாங்கங்கள் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளுக்கு உரிய பதிலை வழங்குவதாகத் தெரியவில்லை.

இந் நிலையில் போர் மௌனிக்கப்பட்டபோது கையளிக்கப்பட்ட உறவுகளின் நிலை என்ன? அது தொடர்பில் இலங்கை அரசு இதுவரையில் முறையான பதிலை வழங்காததன் காரணமென்ன?

எனவே, எமது மக்களின் வலியுணர்ந்து சர்வதேச நிபுணத்துவத்தின் அடிப்படையில், சர்வதேசத்தின் பங்களிப்புடன் நீதியானதும் நியாயமானதுமான விசாரணையை கோருகின்றோம். அதனடிப்படையில் குற்றமிழைத்தவர்கள் தண்டிக்கப்படவேண்டும் என்பதே எமது நிலைப்பாடு - என்றார். (05)



# பிரபாகரன் உயிருடன் இல்லை; எம்மிடம் ஆதாரங்கள் உள்ளன

## பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் கருத்து

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உயிரிழந்து விட்டார் என்பது உறுதி.

அதனை உறுதிப்படுத்துவதற்கான ஆதாரங்கள் பாதுகாப்பு அமைச்சிடம் உள்ளன. பாதுகாப்பை அடிப்படையாகக் கொண்டே குறித்த ஆதாரங்களை வெளியிடப்படாமலுள்ளன என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன் தெரிவித்தார்.

அத்தோடு, தற்போது நாட்டின் ஸ்திரத்தன்மைக்கு பாதிப்பை ஏற்படுத்துவதற்காக சில குழுக்கள் திட்டமிட்டு செயற்பட்டு வருகின்றன எனப் புலனாய்வு தகவல்கள் கிடைத்துள்ளன. இவ்வாறான குழுக்கள் தொடர்பில் பாதுகாப்புதுறை மிக உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் -

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உயிரிழந்து விட்டார் என்பது உறுதியாகும். அவருடன் மிக நெருக்கமாக செயற்பட்ட கருணா அம்மான் , தயா மாஸ்டர் உள்ளிட்டவர்கள் இதற்கு சாட்சி. இது தொடர்பில் பாதுகாப்பு அமைச்சிடம் உரிய தகவல்கள் உள்ளன. எனவே, இது தொடர்பில் மீண்டும் மீண்டும் பேசிக் கொண்டிருக்கத் தேவையில்லை. அதனை விட முக்கியத்துவம் செலுத்த வேண்டிய பல்வேறு காரணிகள் உள்ளன.

நாட்டின் ஸ்திரத்தன்மைக்கு பாதிப்பை ஏற்படுத்துவதற்காக சில குழுக்கள் திட்டமிட்டு செயற்பட்டு வருகின்றன எனப் புலனாய்வுத் தகவல்கள் கிடைத்துள்ளன. அதற்கமைய குறிப்பிட்டவொரு குழுவொன்று வேலை நிறுத்த போராட்டத்தை முன்னெடுத்து, போராட்டத்தின் போது இராணுவம் மற்றும் பொலிஸாரை எவ்வாறு எதிர்கொள்வது என்பது தொடர்பில் ஹோட்டலொன்றில் பயிற்சி பெற்றுள்ளமை தொடர்பான தகவல்களும் கிடைக்கப் பெற்றுள்ளன.

இவ்வாறான குழுக்கள் தொடர்பில் புலனாய்வுப்பிரிவு உள்ளிட்ட பாதுகாப்பு துறை உன்னிப்பான அவதானத்துடனேயே உள்ளது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்கு புலனாய்வு பிரிவின் பலவீனமே காரணம் எனக் கூறுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. எமது நாட்டின் புலனாய்வு பிரிவு மிகுந்த பொறுப்புடன் செயற்பட்டு வருகிறது. அண்மையில் அடிப் படைவாத அரசியல் கட்சியொன்றின் பிரதிநிதிகள் வடக்கிலுள்ள விகாரையொன்றுக்கருகில் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்தனர். பிரச்சினைகளுக்கு பேச்சுகள் மூலம் தீர்வு காண்போம். உண்மையில் மக்கள் மத்தியில் எவ்வித மத பிரிவினைவாதமும் இல்லை. அடிப்படைவாத செயற்பாடுகள், கருத்துக்கள் முன்வைக்கப்படுவதன் பின்னணியில் அரசியல்வாதிகளே காணப்படுகின்றனர் என்பது தெரியவந்துள்ளது.

ஆவா குழுக்கள், பாதாள உலககுழுக்கள் என்பவற்றின் செயற்பாடுகள் கடந்த இரு மாதங்களாக அதிகரித்துக் காணப்பட்டது. எனினும் முப்படை, பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினரின் ஒத்துழைப்புடன் இந்த செயற்பாடுகள் தற்போது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளன. (05)

# வணிக முயற்சியாளர்களுக்குப் பெரிதும் வட்டிவீத குறைப்பு நன்மை பயக்குமாம்

## ஷெஹான் சேமசிங்க கூறுகிறார்



வட்டிவீதங்களைக் குறைப்பதற்கு மத்திய வங்கி மேற்கொண்டுள்ள தீர்மானம் வணிகங்களின் நம்பிக்கையை விரிவுபடுத்தும் எனவும், வணிக முயற்சியாளர்களுக்குப் பெரிதும் நன்மையளிக்கும் எனவும் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

அண்மைய காலங்களில் பணவீக்கத்தில் மிகத்துரிதமான வீழ்ச்சி அவதானிக்கப்பட்டதன் விளைவாக, துணைநில் வைப்புவசதிவீதம் மற்றும் துணைநில் கடன்வசதிவீதம் ஆகியவற்றை மேலும் 200 அடிப்படைப் புள்ளிகளால் முறையே 11 சதவீதம் மற்றும் 12 சதவீதமாகக் குறைப்பதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

மத்திய வங்கியின் இந்த அறிவிப்பு தொடர்பில் தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் பதிவொன்றைச் செய்துள்ள நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க, மத்திய வங்கியின் இந்தத் தீர்மானம் வணிகங்களின் நம்பிக்கையை மேலும் விரிவுபடுத்துமெனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்தோடு இந்த வட்டிவீதக் குறைப்பு நிதியீட்டலுக்கான வாய்ப்பை இலகுபடுத்தியிருப்பதன் விளைவாக இதன்மூலம் வணிக முயற்சியாளர்களும், சிறிய மற்றும் நடுத்தரளவிலான முயற்சியாண்மைகளும் நன்மையடையமுடியுமென நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

மேலும் இந்தத் தீர்மானம் ஒட்டுமொத்த பொருளாதார செயற்பாடுகளையும் வலுப்படுத்தும் எனவும், நிலைபேறான பொருளாதார வளர்ச்சிக்குப் பங்களிப்புச்செய்யும் அதேவேளை, விரைவான மீட்சிக்கு உதவும் எனவும் இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கை மீண்டும் பழைய நிலைக்குத் திரும்புவதை அனுபவிப்பது மிகவும் சிறப்பானதாக இருப்பதாகக் குறிப்பிட்டுள்ள அவர், இருப்பினும் இன்னும் நீண்ட தூரம் செல்லவேண்டியிருப்பதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார். (05)



# 63 பெண்களுக்கு பனையோலை இடியப்பத் தட்டுக்கள் வழங்கல்

'கொவிட் -19 தடுப்பு மருந்துடன் வலிமையுடன் முன்னோக்கி' எனும் தொனிப்பொருளில், நிந்தவூர் பிரதேசத்தில் இடியப்பத்தை குடிசைக் கைத்தொழிலாக மேற்கொள்ளும் பெண்களுக்கு லயன்ஸ் கழகத்தின் ஒருங்கிணைப்புடன், பிரதேச தனவந்தர்களின் உதவியுடன் பனையோலையால் செய்யப்பட்ட இடியப்பத் தட்டுகள் கடந்த வியாழக்கிழமை வழங்கி வைக்கப்பட்டன.

நிந்தவூர்பிரதேசசுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் கே.எல்.எம்.ரயீஸ் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஐ.எல்.எம்.றிபாஸ் கலந்துகொண்டு இதனை வழங்கி வைத்தார்.

பிளாஸ்டிக் பொருள்களை இல்லாது ஒழிக்கும் நோக்கிலும், அதனால் ஏற்படும் பல்வேறு விதமான நோய்களைத் தடுப்பதற்கும் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையால் முன்னெடுக்கப்பட்டுவரும் போசனையான மற்றும் நஞ்சற்ற உணவு திட்டத்தின் கீழ் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. அதன் ஓர் அங்கமாக நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குற்பட்ட பிரதேசங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 63 குடும்பங்களுக்கு தலா 10 இடியப்பத் தட்டுகள் வீதம் வழங்கி அறிமுகப் படுத்தப்பட்டன.

இடியப்பத்தைக் குடிசைக் கைத்தொழிலாக மேற்கொள்ளும் குறித்த 63 பெண்களின் தொழிலை விரிவுபடுத்தும் நோக்கில் அவர்களுக்கு தலா 3 லட்சம் ரூபா வீதம் வட்டியில்லாக் கடனை வழங்க லயன்ஸ் கழகம் முன்வந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வுக்கு கௌரவ அதிதியாக பிரதிப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் எம்.பி.ஏ.வாஜித், தொற்றா நோய்த்தடுப்பு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.ஐ.எம்.எஸ். இர்சாத், சுற்றுச்சூழல் மற்றும் தொழில் வான்மை பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.எஸ்.எம்.பௌசாத், கல்முனை பிராந்திய ஆயுர்வேத வைத்தியசாலைகளின் இணைப்பாளர் வைத்தியர் எம்.ஏ.நபீல் உள்ளிட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும் சுகாதார உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர். (05)

# பலஸ்தீன அகதி முகாம் மீது இஸ்ரேலின் தாக்குதலை இலங்கை கண்டிக்க வேண்டும்

## ஹக்கீம் சபையில் கோரிக்கை

இஸ்ரேல் இராணுவம் பலஸ்தீன் அகதிமுகாம் மீது மேற்கொண்டுள்ள தாக்குதலுக்கு இலங்கை அரசாங்கத்தின் கண்டனத்தைத் தெரிவிக்க வேண்டும்.

இது தொடர்பாக வெளிவிவகார அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் சபையில் கேட்டுக்கொண்டார்.

நாடாளுமன்றத்தில் ஒழுங்கு பிரச்சினை ஒன்றை முன்வைத்து குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் -

பலஸ்தீனில் அகதிமுகாம்கள் இஸ்ரேல் இராணுவத்தினரால் தாக்குதலுக்கு உள்ளாகி இருக்கின்றது. இது அவர்களின் இராணுவ அதிகாரத்தைக்கொண்டு நடத்தப்படும் தாக்குதலாகும்.

இஸ்ரேல் இராணுவத்தினர் அங்குள்ள அகதி முகாம்களில் மேற்கொண்ட தாக்குதலில் 12 பேர் உயிரிழந்துள்ளனர். இஸ்ரேல் இராணுவத்தின் இந்த நடவடிக்கையை எதிர்த்து பல நாடுகளும் கண்டனம் தெரிவித்திருக்கின்றன.

இஸ்ரேல் தூதுவர் உங்களை சந்தித்திருக்கிறார். ஆகக்குறைந்தது எமது கண்டனத்தை யாவது நாங்கள் தெரிவிக்க வேண்டும். அரசாங்கம் சார்பில் நாங்கள் கண்டனம் தெரிவிக்க வேண்டும்.

இந்த இராணுவ நடவடிக்கையை மீண்டும் மேற்கொள்வதாக இஸ்ரேல் பிரதமர் தெரிவித்திருக்கிறார். இதனால் அதிகமான இளைஞர்கள் பாதிக்கப்படுவார்கள்.

அதனால் வெளிவிவகார அமைச்சர் என்றவகையில் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். - என்றார்.

இதற்கு வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி பதிலளிக்கையில் -

இந்த சம்பவம் யாரும் எதிர்பார்க்கப்படாத ஒன்று. ஒரு மாதத்துக்கு முன்னர் கண்டனத்தை தெரிவித்திருந்தோம். இந்த விடயம் தொடர்பாக அவதானம் செலுத்துவோம்.

அத்துடன் இலங்கை அரசாங்கம் எப்போதும் பலஸ்தீன் மக்களுக்காகக் குரல்கொடுத்து வந்திருக்கிறது. அவர்கள் அவர் களின் உரிமைகளை பெற்றுக் கொள்ள வேண்டும். அந்த இடத்தில் அமைதி நிலவும் வரை நாங்கள் குரல் கொடுப்போம். -என்றார். (05)

# இளைஞர்கள் மத்தியில் போதைப் பொருளை கொண்டுசேர்ப்பது முக்கிய பிரமுகர்களாவர்

## நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் சுட்டிக்காட்டு



எதிர்காலத்தைச் சீரழிக்கும் நோக்கில் திட்டமிட்டு மக்கள் மத்தியில் பரப்பப்பட்டுவரும் போதைப்பொருள்களைக் கட்டுப்படுத்தும் பணியில் இளைஞர்கள் தாமாக முன்வந்து பணியாற்ற வேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினரும், ஸ்ரீங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பிரதித்தலைவருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார்.

போதையையும், போதைப்பாவனைகளையும் எமது நாட்டில் இல்லாதொழிப்பதால் எமது எதிர்கால சந்ததியினரை ஒழுக்கமுள்ளவர்களாகவும், அவர்களின் எதிர்காலத்தை சிறந்ததாகவும் உருவாக்கலாம். அதனால் போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கையில் ஈடுபடும் அதிகாரிகளுடன் எமது இளைஞர்கள் சுயமாக இணைந்துகொண்டு செயற்பட முன்வந்தால் மட்டுமே இதை இல்லாதொழிக்க முடியுமென நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் சுட்டிக் காட்டினார்.

அட்டாளைச்சேனை - பாலமுனை பிரதேசத்தில் இடம்பெற்ற விளையாட்டுப்போட்டி பரிசளிப்பு நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர் -

கிழக்கு பிராந்தியத்தில் போதைப்பொருளை அறிமுகப்படுத்தி இளைஞர்கள் மத்தியில் கொண்டு சேர்ப்பதில் முக்கிய பங்கு வகிப்பவர்கள், முக்கிய பிரமுகர்கள் இருக்கின்றனர் என்று போதையொழிப்புக்குப் பொறுப்பாக இருக்கும் அதிகாரி தெரிவித்தார். இதைக்கேட்டு நான் அதிர்ச்சிக்குள்ளானேன்.

கிழக்கு பிராந்தியத்தில் கல்வி, ஒழுக்கம் என்பவற்றை சீரழிக்க இந்த மோசமான பழக்கத்தை தமிழ், முஸ்லிம் இளைஞர்களிடம் உருவாக்க நாட்டிலிருந்த சில முக்கிய பிரமுகர்கள் காரணமாக இருந்தார்கள் என்ற அதிர்ச்சியான உண்மையையும் அந்த அதிகாரி எனக்கு தெரிவித்தார்.

இந்த ஆபத்திலிருந்து எமது இளைஞர்களையும், நாளைய தலைமுறையையும் பாதுகாக்க வேண்டிய பாரிய பொறுப்பு எம் எல்லோருக்கும் இருக்கின்றது. இந்த நிலைமையை மாற்றியமைக்க எங்களால் முடியுமானளவு பல முயற்சிகளைச் செய்து வருகின்றோம்.

இப்போது இளைஞர்களும் முன்வந்து இது தொடர்பான விழிப்புணர்வை உருவாக்க வேண்டிய அவசியமுள்ளதையும் உணர்கின்றோம். சிவில் அமைப்புக்கள் இந்த வேலைத்திட்டத்தில் தங்களின் பார்வையை செலுத்த வேண்டியது மிக அவசியமாகிறது என்றும் அவர் கேட்டுக்கொண்டார். (05)

# மூதூர் மற்றும் தோப்பூர் மீனவர்களின் இறங்குதுறை திட்டத்தை மீளத் தொடங்க தௌபீக் கோரிக்கை

கடந்த வியாழக்கிழமை நாடாளுமன்றக் கட்டிடத்தொகுதியில் நடைபெற்ற மீன்பிடித்துறை அமைச்சின் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் மூதூர் மற்றும் தோப்பூர் பிரதேசத்தில் மீனவர் இறங்குதுறை அமைப்பதற்கான ஆரம்பக்கட்ட வேலைகள் ஆரம்பித்திருந்தும் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சி காரணமாக இடைநிறுத்தப்பட்ட திட்டங்களை மீள அமுல்படுத்துமாறு திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் எம்.பி. கோரிக்கை விடுத்தார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் 2024 இல் இத்திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்குவதாக தெரிவித்தார். (05)

OKAYA ELECTRIC VEHICLES

dsl We lead the way...!

பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை விட 77% இலாபமான பாவனைக்கு

# The inEVitable

## Future of Smart Mobility

FAAST-F4
140-160 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்

FAAST-F2T
80-85 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்

FREEDOM
70-75 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்



Rs.550,000/- இருந்து வண்ணத்தெரிவுகள்:

conditions apply*

இந்தியாவில் வேகமாக வளர்ந்து வரும் மின்சார வாகனம்

2 வருட உத்தரவாதம்

3 இலவச சேவைகள்

Visit DSL EV Experience Center : # 525, Union Place Colombo 02

Hotline - 070 300 9555

காலைக்கதிர்
Kalaikkathir

# வளங்கள் இருந்தும் உரிமை, அதிகாரம் இல்லாமல் தமிழர் நாம் இருக்கின்றோம்

## இந்தியாவில் சாணக்கியன் இடித்துரைப்பு



காலநிலை மாற்றம், சமூக, சுற்றுச்சூழல் மற்றும் பொருளாதார நிலைத்தன்மைதொடர்பானசெயலமர்வு இந்தியாவில் இடம்பெற்றது.

ரி 20 என்னும் அமைப்பால் இந்தியாவின் மேகல்யா என்னும் நகரத்தில் நடத்தப்பட்ட செயலமர்வில் நாடாளு மன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் கலந்து கொண்டார்.

காலநிலை மாற்றம், சமூக, சுற்றுச்சூழல் மற்றும் பொருளாதார நிலைத்தன்மை தொடர்புடைய விடயங்களுடன் தொடர்புடைய பங்குதாரர்களிடையே ஒரு புரிதலை உருவாக்கும் விதத்தில் குறித்த கலந்துரையாடல் இடம்பெற்றது.

காலநிலை மாற்றம் மற்றும் பிற சுற்றுச்சூழல் பிரச்சினைகள் எதிர்கால சந்ததியினருக்கு குறிப்பிடத்தக்க தாக்கங்களை ஏற்படுத்துதல் மற்றும் இவ்வாறான சவால்களை எதிர்கொள்வதில் இளைஞர்களை ஈடுபடுத்துவதன் முக்கியத்துவம் போன்ற விடயங்கள் தொடர்பாகவும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இந்த விடயம் தொடர்பாக கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் இரசமாணிக்கம் சாணக்கியன்,

'இலங்கையும் இவ்வாறானதொரு காலநிலை மாற்றம் தொடர்பில் ஒத்துழைப்பு வழங்குவதாக இருந்தால் எமது மக்களில் சில வாழ்வாதார நடவடிக்கைகள் தாக்கம் செலுத்துவதாக இருப்பினும் அதற்கான மாற்று திட்டத்தை கரிசனையில் கொள்வதன் மூலம் நாமும் எதிர்வரும் காலங்களில் காலநிலை மாற்றத்திற்கான ஒத்துழைப்பை வழங்கமுடியும்.

மேகல்யா எனப்படும் இவ் மாநிலம் 70 களில் உருவாக்கப்படதாகும்.

இந்த மாநிலம் அங்கு காணப்படும் வளங்களை கொண்டு மிகவும் அபிவிருத்தி அடைந்த இடமாக காணப்படுகின்றது.

இதே போன்று எமக்கும் எமது வடக்குகிழக்குமாகாணங்களுக்குரிய அதிகாரங்களைப் பகிர்ந்து கொண்டு அதற்கான அதிகாரங்களை வழங்குவார்கள் எனில் எம்மாலும் குறிப்பிட்ட சில காலங்களுக்குள் எம்மாலும் பாரிய அபிவிருத்திகளை உருவாக்க முடியும் என்பதனை எமது நாட்டின் அரசுக்கு சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன்.

வளங்கள் இருந்தும் உரிமை அதிகாரம் இல்லாமல் இருக்கின்றோம். இதனையே எமது கட்சியான தமிழரசுக் கட்சியும் காலம் காலமாக வலியுறுத்தி வருகின்றது' என அவர் மேலும் குறிப்பிட்டார். (05)

# யானையால் பாதிக்கப்பட்டோருக்கு காரைதீவில் நஷ்ட ஈடு வழங்கல்










கடந்த 2022 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் காட்டு யானைகளின் தாக்கத்தால் சொத்தழிவுக்குள்ளாகிய காரைதீவு-10 மற்றும் காரைதீவு-11 ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் 06 பயனாளிகளுக்கான நஷ்டஈட்டுக் கொடுப்பனவுக்கான 2 லட்சத்து 17 ஆயிரம் ரூபாவுக்கான காசோலைகள் காரைதீவு பிரதேச செயலாளர் எஸ். ஜெகராஜனால் பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் தொழில்நுட்ப உத்தியோகத்தர் மற்றும் அனர்த்த நிவாரண சேவைகள் உத்தியோகத்தர் ஆகியோர்களும் கலந்து கொண்டனர். (05)

# பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கான நலன்புரி விடயங்கள் சட்டமாக்கப்படும்



பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான தொழில்சார் உரிமைகளையும், அவர்களுக்கான நலன்புரி சார் விடயங்களையும் பாதுகாப்பதற்கு தனியானதொரு சட்டம் இயற்றப்பட வேண்டும் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், அமைச்சருமான ஜீவன் தொண்டமானால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு தொழில் அமைச்சின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றுள்ளது.

இதற்கமைய இது தொடர்பான சட்டமூலத்தை விரைவில் நாடாளுமன்றத்தில் முன்வைத்து, அதனை நடைமுறைப்படுத்துவதற்கு தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்கார இணக்கம் தெரிவித்துள்ளார் என இ.தொ.காவின் உப தலைவரும், தேசிய தொழில் ஆலோசனை சபை உறுப்பினருமான பாரத் அருள்சாமி தெரிவித்தார்.

நாட்டில் அமுலில் உள்ள தொழில் சட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய சட்ட திருத்தங்கள் தொடர்பில் ஆலோசனைகள், யோசனைகள் மற்றும் கருத்துகள் பல தரப்புகளிடம் இருந்தும் பெறப்பட்டன. இது தொடர்பில் தொழில் அமைச்சர் தலைமையில் கூட்டங்களும் நடத்தப்பட்டன.

இவற்றைஅடிப்படையாகக்கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள உத்தேச தொழில் சட்டமூலம் குறித்தான வரைவு நகல் தேசிய தொழில் ஆலோசனை சபையில் வியாழக்கிழமை சமர்ப்பிக்கப்பட்டது.

பல பகுதிகளாக பிரிந்திருந்த தொழில்சார் சட்டங்களையும், நடைமுறைகளையும் ஒன்றிணைந்து, நாட்டில் ஒரே தொழில் சட்டத்தை அமுல்படுத்துவதற்கான உத்தேச வரைவு நகலே முன்வைக்கப்பட்டுள்ளது.

குறித்த வரைவு நகல் தொடர்பான தமது நிலைப்பாட்டை, கருத்துகளை எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்னர் தேசிய தொழில் ஆலோசனை சபை உறுப்பினர்கள் முன்வைக்க வேண்டும்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட பாரத் அருள்சாமி -

இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் பெரும் பங்களிப்பை பெருந்தோட்ட தொழிலாளர்களே வழங்கினர். எனவே, பெருந்தோட்ட தொழிலாளர்களின் தொழில் உரிமைகள் மற்றும் நலன்புரி விடயங்களை உள்ளடக்கிய விசேட சட்டமொன்று இயற்றப்பட வேண்டும் என இ.தொ. காவின் பொதுச்செயலாளர் அமைச்சர் ஜீவன் தொண்டமான் ஜனாதிபதி, தொழில் அமைச்சர், பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் உள்ளிட்ட தரப்பினரிடம் கோரிக்கை விடுத்திருந்தார். அதற்கு தற்போது வெற்றி கிட்டியுள்ளது.

தொழில் சட்டத்துக்கு புறம்பாக மேலதிக சட்டமாகவே இது அமுலுக்குவரும். இது பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு கிடைத்துள்ள அங்கீகாரமாகும். - எனவும் பாரத் அருள்சாமி குறிப்பிட்டார்.

கடந்த காலங்களில் கூட்டு ஒப்பந்தம் மூலமே நலன்புரி விடயங்கள் பாதுகாக்கப்பட்டன.

எனினும், நலன்புரி விடயங்கள் முழுமையாக தொழிலாளர்களுக்கு கிடைக்கவில்லை. இந்நிலையில் தற்போது சட்டம் ஊடாக தொழில் தொழில் பாதுகாப்பு, நலன்புரி விடயங்களைப் பாதுகாக்க ஏற்பாடு இடம்பெற்றுள்ளது. - எனவும் பாரத் அருள்சாமி குறிப்பிட்டார். (05)

# சிறுவனை மோதித்தள்ளி உயிரிழப்பை ஏற்படுத்திய சாரதிக்கு விளக்கமறியல்

வீதியை கடக்க காத்திருந்த சிறுவனை மோதி உயிரிழப்பை ஏற்படுத்திய சாரதியை எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கிளிநொச்சி, பளை பகுதியில் வீதியை கடக்க காத்திருந்த சிறுவனை மோதித் தள்ளிய சாரதியை எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது .

கிளிநொச்சி பளை முல்லையடி பகுதியில் புதன்கிழமை பகல் சைக்கிளில் வீதியை கடப்பதற்காக காத்திருந்த சிறுவனை வேகமாக வந்த கப்ரக வாகனம் மோதி தள்ளியது.

குறித்த சம்பவத்தின் போது வீதியில் காத்திருந்த சிறுவன் சம்பவ இடத்திலே உயிரிழந்துள்ளார் .

விபத்தை ஏற்படுத்திய சாரதி விபத்து நடந்த இடத்திலிருந்து தப்பிச்சென்ற நிலையில் வியாழக்கிழமை பளைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு ஆரம்பகட்ட விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன .

நேற்று (வெள்ளிக்கிழமை) சம்பவத்துடன் தொடர்புபட்ட சாரதியை கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி சுபராஜினி முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து, குறித்த சந்தேக நபரை எதிர்வரும் 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (05)

# இராணுவ வீரர்களுக்கு காத்திருக்கும் ஆபத்து

## சரத் வீரசேகர எச்சரிக்கை



சர்வதேச பொறிமுறையின் கீழ் விசாரணைகள் இடம்பெற வேண்டும் என்று ஜெனிவா பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ளமை எமது நாட்டு இராணுவ வீரர்களுக்கு பாத கமாக அமையுமென நாடாளு மன்ற உறுப்பினர் சரத் வீரசேகர எச்சரித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வியடம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

எமது நாட்டின் இடம்பெற்றதாகக் கூறப்படும் யுத்தக்குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக சர்வதேச பொறிமுறையின் கீழ் விசாரணை இடம்பெற வேண்டும் என்று ஜெனிவாபிரேரணையில்குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்குஅரசாங்கம்எதிர்ப்பைவெளியிட்டுள்ளது.

எனினும் இந்தப் பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளது. இதன் ஊடாக எமது இராணுவத்தினருக்கு எதிராக ஆதாரங்களை திரட்டினால், அவர்களை சர்வதேச நீதிமன்றுக்கு கொண்டுசெல்ல முடியுமா என்பதை நாம் ஆராய வேண்டும்.

காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்துக்கும் நாம் அன்று எதிர்ப்பை இங்கு வெளியிட்டோம்.

ஏனெனில், இதில் எவரேனும் ஒருவர் இராணுவத்தினருக்கு எதிராக பொய் சாட்சி கூறுவாராயின், குறித்த இராணுவ வீரரை கைதுசெய்து சர்வதேச நீதிமன்றில் முன்னிலைப்படுத்த முடியும்.

ரோம் உடன்படிக்கையில் நாமும் கைச்சாத்திட்டுள்ளமையால், இவ்வாறான செயற்பாடுகள் எதிர்க்காலத்தில் இடம்பெறலாம்.

எனவே, இவை நடக்காமல் இருக்க அரசாங்கம் வழிவகை செய்ய வேண்டும். அத்தோடு, யுத்தத்தை முடிவுக்குகொண்டுவந்த பாதுகாப்புத் தரப்பினர், அரசியல்வாதிகளுக்கு சில நாடுகள் பயணத்தடை விதித்துள்ளன.

இது முற்றாக சட்டவிரோதமான செயற்பாடாகும் என அவர் மேலும் எச்சரித்துள்ளார். (05)







# மாளிகைக்காடு ஜும்மா பெரியபள்ளி 1,000ஆவது குத்பாவும் அன்னதானமும்

காரைதீவு பிரதேச செயலகத்தின் நிர்வாக எல்லைக்குட்பட்ட மாளிகைக்காட்டின் முதலாவது பள்ளிவாசலும், தலைமை ஜும்மா பள்ளிவாசலுமான அந்நூர் ஜும்மா பெரியபள்ளிவாசலின்'1,000வது ஜும்மா குத்பாவும், பகல் உணவு வழங்கும் நிகழ்வும்' நேற்று (வெள்ளிக்கிழமை) நடைபெற்றது.

இந்த 1,000 ஆவது குத்பா பேருரையும் ஜும்ஆ தொழுகையும் அகில இலங்கைஜம்இய்யதுல்உலமாசபையின் பத்வா குழு உறுப்பினரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான அஷ்-ஷெய்க் மௌலவி எம்.ஏ.எம்.அன்பாஸ் முப்தி நிகழ்த்தினார். இந்த குத்பா உரையின் போது கல்வி, சொத்துப்பிரிப்பு, போதைப் பொருள் பாவனையின் விளைவுகள், பள்ளிவாசல் நிர்வாகம் தொடர்பில் சிறப்புரை நிகழ்த்தினார்.

மாளிகைக்காட்டின்எல்லைப்புறத்தில் அமையப்பெற்றுள்ளஇந்தப்பள்ளிவாசலில் ஜும்ஆத் தொழுகை ஒன்றை தமது கிராமத்தவர்களுக்கென தனித்துவமாக நடைமுறைப்படுத்த முடியாமல், சாய்ந்தமருதுபிரதேசத்தில்நீண்டகாலமாக நம்பியிருந்த நிலையில் மாளிகைக்காடு-சாய்ந்தமருது பிரதேச உலமாக்கள், சமூக செயற்பாட்டாளர்களின் அளப்பரிய தியாகங்களுக்கும் போராட்டங்களுக்கும் மத்தியில் ஜும்ஆத் தொழுகையை ஆரம்பித்து நேற்று அதன் 1,000 ஆவது ஜும்மா நிகழ்வை நடத்துகிறது என்பது ஒரு வரலாற்று சாதனை எனலாம்.

கடந்த 2004 ஆம் ஆண்டு மே மாதம் 14 ஆம் திகதி முதல் ஜும்ஆ பள்ளிவாசலாகப் பிரகடனப்படுத்தப்பட்ட இந்தப்பள்ளிவாசலின் முதலாவது குத்பா பேருரையும் ஜும்ஆ தொழுகையும் அகில இலங்கை ஜம் இய்யத்துல் உலமா சபையின் முன்னாள் அதியுயர் பீட உறுப்பினரும், அகில இலங்கை பிறை குழுச் செயலாளரும் கொழும்பு ஜம்இய்யத்துல் உலமாவின் செயலாளருமான காலஞ்சென்ற மௌலவி ஏ.எம்.அப்துல் அஸீஸினால் (மிஸ்பாஹி) அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

கல்முனைபிராந்தியத்தின்பல்வேறு பிரதேசங்களையும் சேர்ந்த உலமாக்கள், புத்திஜீவிகள், கல்விமான்கள், பிரமுகர்கள், பொதுமக்கள் என ஆயிரக்கணக்கானவர்கள் கலந்து கொண்டிருந்தனர். (05)

காலைக்கதிர்
Kalaikkathir







# கோணக்கலை தோட்ட நிர்வாகத்துடன் கிழக்கு ஆளுநர் செந்தில் விசேட சந்திப்பு

தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் தொடர்பான பிரச்சினைகள் தொடர்பாக கோணக்கலை தோட்டத்துக்கு இ.தொ.கா. தலைவரும் கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமான் விஜயம் மேற்கொண்டுள்ளார்.

இதன்போது தோட்ட தொழிலாளர்களின் அரைச் சம்பளம் தொடர்பான பிரச்சினை, கள அதிகாரியின் அநாகரீகமான நடத்தை மற்றும் ஏனைய தொழிற்சங்க பிரச்சினைகள் தொடர்பாகத் தோட்ட நிர்வாகத்துடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டார்.

இந்தக் கலந்துரையாடலின் போது தோட்ட மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் சுட்டிக் காட்டப்பட்டதுடன், அந்தப் பிரச்சினைகளுக்கு உடனடியாகத் தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு நிர்வாகம் ஒப்புக்கொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (05)

# பிணைமுறி மோசடி தொடர்பில் அரசின் நிலைப்பாடு என்ன?

## வாசுதேவ சபையில் கேள்வி



மத்திய வங்கிப் பிணைமுறி மோசடியுடன் தொடர்புடைய மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் தொடர்பாக அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கை குறித்து தெளிவுபடுத்த வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வியடம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

'மத்திய வங்கிப் பிணைமுறி மோசடியுடன் தொடர்புடைய, மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனை, சிங்கப்பூரிலிருந்து நாட்டுக்கு கொண்டுவர அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

இலங்கையில் குற்றமிழைத்த ஒருவர், சிங்கப்பூரில் வாழ்ந்து வருகிறார். எப்போது இவரை கொண்டுவருவீர்கள்?

சந்தேகநபர் என்ற வகையில், அவர் இன்னமும் எமது நாட்டு நீதிமன்றில் முன்னிலையாகவில்லை.

அவர் நாட்டை விட்டு வெளியேறி 8 வருடங்கள் ஆகிவிட்டன. இது தொடர்பாக அப்போதைய பிரதமரும் தற்போதைய ஜனாதிபதியும் என்ன பதில் கூறப்போகிறார்?

இனியேனும், அவரை நாட்டுக்குள் கொண்டுவர அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த விடயத்தை நாம் வலியுறுத்தினால், நிச்சயமாக அந்நாட்டு அரசாங்கம் நடவடிக்கை எடுத்தே ஆக வேண்டும்' என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (05)

# யாழில் மாணவி மீது ஆசிரியர் தாக்குதல்

யாழ்ப்பாணத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் தரம் மூன்றில் கல்வி கற்கும் மாணவி ஒருவரை ஆசிரியர் தாக்கியதில் அந்த மாணவி காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வலிகாமம் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலையில் கல்வி கற்று வரும் குறித்த மாணவிக்கு கடந்த வியாழக்கிழமை பாடசாலையில் வைத்து ஆசிரியர் ஒருவர் அடித்து கண்டித்துள்ளார்.

அதனால் மாணவியின் கையில் காயம் ஏற்பட்டதையடுத்து, பாடசாலை நிர்வாகம் மாணவிக்கு அருகில் உள்ள மருந்தகம் ஒன்றில் நோவிற்கான எண்ணெய் ஒன்றை வாங்கி பூசியுள்ளனர்.

மாணவி பாடசாலை முடிந்து வீடு திரும்பிய பின்னரும், கை நோவால் அவதிப்பட்ட நிலையில், பெற்றோர் அது தொடர்பில் விசாரித்த போது, மாணவி பாடசாலையில் நடந்த சம்பவம் தொடர்பில் விவரித்துள்ளார்.

இந்நிலையில், குறித்த மாணவியை பெற்றோர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர். (05)

# இரத்தக் காயங்களுடன் இளைஞர் சடலம் மீட்பு

*இரத்தக் காயங்களுடன் இளைஞர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.*

*மாத்தறை, திக்கொடை பிரதேசத்தில் நேற்று அதிகாலை குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளது.*

*அப்பிரதேசத்தைச் சேர்ந்த 25 வயதுடைய கவிந்து பெர்னாண்டோ என்ற நபரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.*

*அவரது வீட்டுக்கு முன் வீதியில் இருந்து சடலம் மீட்கப்பட்டுள்ளது.*

*நண்பன் ஒருவரின் வீட்டுக்கு நேற்று மாலை பஸ்ஸில் சென்றிருந்த குறித்த இளைஞர், இன்று அதிகாலை வீடு திரும்புவதாகப் பெற்றோரிடம் தெரிவித்திருந்தார் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.*

*இந்நிலையில், அவர் தனது வீட்டுக்கு முன் வீதியில் இருந்து இன்று அதிகாலை 3 மணியளவில் இரத்தக் காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.*

*வீதி விபத்தில் சிக்கி அவர் உயிரிழந்தாரா அல்லது கொலை செய்யப்பட்டாரா என்பது தொடர்பில் பிரேத பரிசோதனையின் பின்னரே தெரியவரும் என்று கூறிய பொலிஸார், இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (02)*

# பொன்னாலை வரதராஜ பெருமாளுக்கு நேற்று குடமுழுக்கு







*யாழ்ப்பாணம் - பொன்னாலை ஸ்ரீ வரதராஜப்பெருமாள் ஆலய நவ தள கோபுர குடமுழுக்கு விழா நேற்றுக் காலை பக்திபூர்வமாக இடம்பெற்றது.*

*வாச்சாரியார்கள் வேதம் ஓத, ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொள்ள இந்த நிகழ்வு இடம்பெற்றது*

# எம்மை எடுப்பார் கைப்பிள்ளைகளாக இனியும் பயன்படுத்திவிட முடியாது

## தமிழ்நாட்டில் மனோ கணேசன் விளாசல்



ஒட்டுமொத்த 40 இலட்சம் இந்திய - தமிழக வம்சாவளி மலையகத் தமிழர்கள் தொடர்பில் இலங்கை அரசு, இந்திய அரசு, பிரிட்டிஷ் அரசு ஆகியவற்றுக்குப் பெரும் தார்மீகப் பொறுப்பும், கடமையும் இருக்கின்றன. இந்த அரசுகள் தமது தேசிய சொந்த நலன்களுக்காக இனியும் நம்மை எடுப்பார் கைப்பிள்ளைகளாகப் பயன்படுத்திவிட முடியாது.

இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற மனோ கணேசன் தெரித்தார்.

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பியைக் கௌரவ தலைவராகக் கொண்டு தமிழ்நாட்டில் இலங்கை - தமிழக மலையகத் தமிழர் தோழமை இயக்கம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. தமிழ்நாடு - திருச்சியில் புதன்கிழமை நடைபெற்ற அங்குரார்ப்பண நிகழ்வில் மனோ கணேசன் எம்.பி. உரையாற்றும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

இது ஒரு வரலாற்று முகியத்துவம் மிக்க நாள். இலங்கையில் வாழும் இந்திய - தமிழக வம்சாவளி மலையகத் தமிழரும், இந்திய - தமிழகத்துக்குத் தாயகம் திரும்பியதாகச் சொல்லப்படும் தமிழகத்தில் வாழும் மலையகத் தமிழரும் அமைப்பு ரீதியாக ஒன்றுபடும் நாள்.

இதன்மூலம் இலங்கையில் வாழும் இந்திய - தமிழக வம்சாவளி மலையகத் தமிழர் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அவர்களது அபிலாஷைகள் தொடர்பில் தமிழகத்தில் புதிய ஒளி பாய்ச்சப்படுகின்றது. அதேபோல் தாயகம் திரும்பியதாகச் சொல்லப்பட்டு தமிழகத்தில் வாழும் மக்களின் துன்பங்களையும் அறியக் கூடியதாக இருக்கின்றது.

இலங்கையில் ஏறக்குறைய 15 இலட்சம் இந்திய - தமிழக வம்சாவளி மலையகத் தமிழர் வாழ்கின்றார்கள். அதேபோல் தாயகம் திரும்பியதாகச் சொல்லப்படுவோர் தமிழகத்தில் 25 இலட்சம் பேர் வாழ்கின்றார்கள். ஆக மொத்தம் 40 இலட்சம்.

இந்த 25 இலட்சம் பேருடன் சேர்த்து மொத்தம் 40 இலட்சம் பெரும் இலங்கையில் குடியுரிமையுடன் வாழ்ந்திருக்க வேண்டும். வாழ்ந்திருந்தால் இலங்கை நாடாளுமன்றத்தில், நாம் 40 எம்.பிக்கள் இருந்திருப்போம். அதன்மூலம் அரசியல் ரீதியாக நாம் பலம் பெற்று இருந்திருப்போம். எம்மை மீறி எவரும் இலங்கையில் அரசு அமைக்க முடியாது. ஆகவே, எமது உரிமைகள் இன்றைய நிலைமையைப் போல் பறிக்கப்படும் நிலைமை ஒருபோதும் உருவாகி இருக்காது.

ஆனால், 1948இல் எமது குடியுரிமை பறிக்கப்பட்டது. அப்புறம் வாக்குரிமை பறிக்கப்பட்டது. இனவாத அரசை எதிர்த்து அன்றைய நமது தொழிற்சங்க தலைமைகள் மக்களை அணிதிரட்டி போராட்டங்களைச் செய்யத் தவறினார்கள். அப்போது காத்திரமாகச் செயற்பட்டு இலங்கை அரசை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரத் தவறிய இந்திய அரசு, அதன்பின் 1964 இல் எம்மிடம் கலந்து ஆலோசிக்காமலேயே பெருந்தொகையான எமது மக்களை இந்தியாவுக்குத் திருப்பி எடுத்து எம்மைப் பலவீனமடையவும் செய்துவிட்டது.

அன்று அப்படி தாயகம் திரும்பிய மக்களின் வாழ் நிலைமையும் மிகவும் மோசமாகவே இருக்கின்றது. இவர்களுக்குச் சரியான நல்வாழ்வுத் திட்டங்களை அமைத்துத் தர இந்திய அரசு தவறிவிட்டத்தையும் இன்று நான் கண்கூடாகக் காண்கின்றேன்.

மறுபுறம் 1948 முதல் 1972 வரை, இலங்கை பிரிட்டிஷ் முடியாட்சியின் கீழ்தான் இருந்தது. அதன்பிறகுதான் இலங்கை குடியரசானது. குடியுரிமை, வாக்குரிமை பறிக்கப்பட்டபோதும், 1956 சிங்களம் மட்டும் சட்டம் கொண்டுவரப்பட்டபோதும், 1964இல் சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம் செய்யப்பட்ட போதும், பிரிட்டிஷ் அரசு வாய் திறக்கவில்லை. அன்றைய நமது தொழிற்சங்கத் தலைமைகளும் இந்த அநீதிகளை பிரிட்டிஷ் முடியாட்சிக்கு எடுத்துக் கூறி, நியாயம் கேட்கவும் இல்லை. எல்லாவற்றுக்கும் மேல் எமது மூதாதையினரை 1823 முதல் இலங்கைக்குக் கொண்டு சென்று, தமக்கு ஏற்றுமதி வருவாய் தந்த பெருந்தோட்டங்களை அமைத்ததும் பிரிட்டிஷ் முடியாட்சித்தான்.

ஆகவே, இந்த ஒட்டுமொத்த 40 இலட்சம் தமிழர்கள் தொடர்பில் இலங்கை அரசு, இந்திய அரசு, பிரிட்டிஷ் அரசு ஆகியவற்றுக்குப் பெரும் தார்மீகப் பொறுப்பும், கடமையும் இருக்கின்றன. இந்த அரசுகள் தமது தேசிய சொந்த நலன்களுக்காக இனியும் நம்மை எடுப்பார் கைப்பிள்ளைகளாகப் பயன்படுத்த விட முடியாது.

இந்த மூன்று அரசுகளும் முன்வந்து எமக்கான நல்வாழ்வுத் திட்டங்களை அமைத்துத் தர வேண்டும். அதை நாம் இனி தேசிய, சர்வதேச அரங்குகளில் வலியுறுத்தி தீர்வுகளைத் தேடி பெறுவோம். இலங்கை - தமிழக மலையகத் தமிழர் தோழமை இயக்கத்தின் மூலம் இந்த நோக்கங்களை நாம் வலியுறுத்துவோம் - என்றார். (02)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.07.2023இல் வெளியிடப்பெற்றது.